53.

Approved by the Text-Book Committee, Madras.
Vide page 243. Fort. St. George Gazette Part 1. B. Dated 12-4-1932.

மௌரிய சக்ரவர்த்தி

அல்லது

மதிமிக்க அசோகர்

சென்னை,
தொண்டைமண்டலம் ஹைஸ்கூல்
தமிழ்ப் பண்டிதர்
எஸ். எஸ். அருணகிரிநாத முதலியார்
எழுதியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தக வர்த்தகர்,
மதுரை & சென்னை.

 1934. Price As. 6.

மௌரிய சக்கரவர்த்தி

அல்லது

மதிமிக்க அசோகர்

சென்னைத் தொண்டைமண்டலம் துளுவவேளாளர்
உயர்தரப் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர்
எஸ். எஸ். அருணகிரிநாத முதலியார்
எழுதியது.

பிரசுரகர்த்தர்:
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை & சென்னை.

ரெஜிஸ்தர் செய்தது] 1934 [இதன் விலை அணா 6.

Printed at
The Excelsior Power Press,
Madura.

முன்னுரை

அயல் நாட்டுப் பெருமக்களின் சரிதங்களை எழுதுவதோடு, நமது நாட்டுப் பெருமக்களின் சரிதங்களையும் எழுதுவது மாணவர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய செய்கையாகும் எனக் கருதி நான் 'மௌரிய சக்கரவர்த்தி' என்னும் பெயரினையுடைய இந்தப் புஸ்தகத்தை எழுதினேன். இதில் மாணவர்களின் நன்மைக்கான விஷயங்களை நன்கு விளக்கி யுள்ளேன். பெரியோர்க்குரிய விடயங்களும் இதில் நிறைந்து இருக்கின்றன. இதைத் தமிழுலகம் தாழாது ஏற்கும் என நம்புகின்றேன்.

எஸ். எஸ். அருணகிரிநாதன்.

மௌரிய சக்கரவர்த்தி

விஷய அட்டவணை

அத்தியாயம். பக்கம்.

மௌரிய சக்கரவர்த்தி

அல்லது

மதிமிக்க அசோகர்

முதலாம் அத்தியாயம்

1. பூர்வீகம்

கிரேக்க தேசத்தைச் சேர்ந்தவரான அலெக்ஸாண்டர் என்பவர் உலகத்தை யெல்லாம் வென்று ஒரு குடையின் கீழ் ஆளவேண்டுமென்னும் கருத்தைக் கொண்டு கிரேக்க தேசத்தை விட்டுப் பற்பல நாடுகளை ஜயித்துப் பின்னர், இறுதியாக, இந்தியாவின்மீது படையெடுத்தார்.

அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த போது பஞ்சாப் மாகாணத்தைப் புருஷோத்தமர் என்னும் ஓர் அரசர் ஆண்டு வந்தார். அவர் புஜபல பராக்கிரமம் நிரம்பப் பெற்ற சுத்த வீரர். அலெக்ஸாண்டரை எதிர்த்தார்; எனினும் யுத்தத்தில் தோல்வியுற்றார். அலெக்ஸாண்டர் புருஷோத்தமரை அவருடைய புஜபல பராக்கிரமங்களுக்காக மெச்சி அவருடைய இராஜ்ஜியத்தை அவருக்கே திருப்பிக்கொடுத்துவிட்டு அவருடன் சிநேகம் செய்து கொண்டார்.

அலெக்ஸாண்டர் இந்தியாவை விட்டுத் திரும்பிச் செல்லுகையில், வழியில், விஷசுரம்

கண்டு பாபிலோன் என்னும் பட்டணத்தில் இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு அவரு டைய இராஜ்ஜியத்தை அவருடைய சேனுவீரர் கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள்.

செலுக்கஸ் நிக்கட்டார் என்னும் பெயரை யுடைய சேனுவீரர் அலெக்ஸாண்டருடைய சேனு வீரர்களில் மிகவும் சிறந்தவர். அவர் இந்தியா வின்மீது படையெடுத்துப் பின்னுஞ் சில இராஜ் ஜியங்களை ஜயிக்க வேண்டுமென்ற எண்ணத்து டன் பெருஞ் சேனை ஒன்றைத் திரட்டிக் கொண்டு இந்தியாவின் மீது படை யெடுத்தார்.

இந்தியாவில் நந்தர்கள் என்னும் ஒரு வம் சத்தினர் அரசாட்சி செய்து கொண்டு வந்தனர். அந்த வம்சத்தைச் சேர்ந்த கடைசி அரசன் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயை மணந் துகொண் டிருந்தான். அவளுடைய பெயர் மூரா என்பதாகும். இந்த மூரா என்னும் பெயரினைக் கொண்ட மாதுக்கும், கடைசிவேந்தனும் நந்த அர சனுக்கும் பிறந்த குமாரர் சந்திர குப்தர் என்பவர். சந்திர குப்தர் சிறு வயது முதற் கொண்டே புஜ பல பராக்கிரமங்களில் சிறந்து விளங்கிப் பல்லோ ராலும் புகழப்பட்டு வந்தார்.

அக்காலத்தில் நந்தர்களால் ஆளப்பட்டு வந்த மகத தேசத்தில் சாணக்கியன் என்னும் பெயரினைக்கொண்ட பிராமணன் ஒருவன் இருந் தான். அவனுக்கு நந்தர்க ளிடத்தில் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. ஆகவே அவன் நந்தர்களை

ஒழித்து விடுவது எப்படி என்பதைக் குறித்து எப்பொழுதும் ஆலோசித்துக் கொண் டிருந்தான். சாணக்கியன் இராஜரிக விஷயங்களில் மிகவும் பேர் போனவன். அவனுக்குக் கௌதல்யன், விஷ்ணு குப்தன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. அவன் அர்த்த சாஸ்திரம் என்னும் ஓர் ஒப்பற்ற நூலை இயற்றி இருக்கின்ருன். அந்த நூலிலிருந்து நாம் அநேக விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகின்ருேம். அந்நூல் ஐரோப்பியர்களாலும் போற்றப் படுகின்றன.

சந்திரகுப்தரை நந்தர்கள் இகழத் தலைப்பட்டார்கள். ஆகவே அவர் நந்தர்களுக்குக் கேடு சூழ்ந்து அவர்களுடைய இராஜ்ஜியத்தைக் கைப்பற்றித் தாம் அரசாள வேண்டும் என்ற எண்ணத்தைக்கொண்டார். அதற்கு,'யாருடைய துணையைக் கொள்ளலாம்,' என்று சந்திர குப்தர் ஆலோசித்துக்கொண்டிருந்தார். அப் போது அவருக்கு இராஜரிகத் தந்திரங்களில் சிறந்து விளங்கிக் கொண்டிருந்தவனுகிய சாணக்கியனைப் பற்றி நினைவு வந்தது. வரவே அவர் சாணக்கியனை அடுத்துத் தம்முடைய குறைகளை அவன் இரக்கப் படும்படி சொன்னுர். அவருடைய முறைப்பாடுகளைக் கேட்ட சாணக்கியன் அவரிடத்தில் அன்பும், பிரியமும் கொண்டான். ஆகவே அவன் தன்னை வந்து அடுத்த சந்திர குப்தருக்கு வேண்டிய தேறுதல்களைச் சொல்லி அவரை அனுப்பி விட்டுத் தான் மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து ஆலோசிக்கலானுன்.

பிறகு சந்திர குப்தர் சாணக்கியனுடைய சாகசங்களால் மகத இராஜ்ஜியத்திற்கு அரசராகித் தமக்குப் பலவிதத்திலும் உதவி புரிந்த சாணக்கியனைத் தமக்குப் பிரதம மந்திரியாக வைத்துக் கொண்டார். சாணக்கியன் தன்னுடைய எண்ணம் நிறைவேறியதைக் கண்டுமிகவும் சந்தோஷித்தான்.

அலெக்ஸாண்டருடைய சேனு வீரர்களில் ஒருவரான செலுக்கஸ் நிக்கட்டார் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது வட இந்தியாவில் அரசு புரிந்து கொண்டிருந்த அரசர்களில் பிரபலமானவர் சந்திர குப்தர் ஆவர். அவர் அந்த கிரேக்க சேனு வீரரைத் தோற்கடித்தார். தோல்வியடைந்த அந்தக் கிரேக்க வீரர் சந்திர குப்தருடன் சிநேக உடன் படிக்கை ஒன்று செய்து கொண்டு தம் நாட்டுக்குத் திரும்பினர். அவர் சந்திர குப்தருடைய தலைமைப் பட்டணமாகிய பாடலி புரத்தில் மெகஸ்தனிஸ் என்னும் தம்முடைய தூதர் ஒருவரை இருக்கச் செய்தார். அவர் தம் பெண்ணையும் சந்திர குப்தருக்குக் கலியாணம் செய்து கொடுத்தார்; பின்னும் ஐந்நூறு யானைகளையும் சந்திர குப்தருக்கு இனமாகக் கொடுத்தார்.

சந்திரகுப்தர் தம்முடைய புஜபல பராக்கிரமங்களினுலும், அறிவாற்றல்களினுலும் தம்முடைய இராஜ்ஜியத்தை நருமதை நதிக்கரை வரையிலும் பரவச்செய்தார்.

மெகஸ்தனிஸ் பாடலிபுரத்தில் இருந்த போது அவர் தம்முடைய காலத்தை வீணில்

செலவழிக்காமல் உபயோகமான கரியங்களிலேயே செலவழித்து வந்தார். அவர் அக்காலத்திய நிலையைக் குறித்து ஒரு நூல் செய்திருக்கின்ருர். அதிலிருந்து நாம் பல விஷயங்களை அறிந்து கொள்ளலாம்.

மெகஸ்தனிஸ் பாடலிபுரம் தக்க அரண்களால் சூழப்பட்டு இருந்ததென்றும், எதிரிகள் அதனைச் சுலபத்தில் தங்கள் வசம் ஆக்கிக் கொள்ளாதவாறு அது பாதுகாக்கப்பட்டு வந்ததென்றும், மகத தேசத்தின் தலைநகராகிய பாடலிபுரத்தில் மாத்திரம் நான்கு இலட்சம் சேனு வீரர்கள் இருந்தார்களென்றும், சந்திரகுப்தருடைய நிரந்தர சேனையில் ஆறு லட்சம் காலாட் படைகளும், மூன்று லட்சம் குதிரைப் படைகளும், ஒன்பதினுயிரம் யானைகளும் இருந்தன வென்றும் குறிப்பிட்டிருக்கின்ருர்.

சந்திரகுப்தர் மகத இராஜ்ஜியத்தை இருபத்து நான்கு வருட காலம் ஆண்டு வந்தார். அவருக்குப் பிறகு அவருடைய புத்திரரான பிந்துசாரர் பட்டத்திற்கு வந்தார். அவர் தம் தகப்பனுரால் தமக்குச் சம்பாதித்துக் கொடுக்கப்பட்ட இராஜ்ஜியத்தை நிலைபெற்றிருக்கச் செய்தார். அவர் தென்னிந்தியாவின் சில பாகங்களை வென்று தம் இராஜ்ஜியத்துடன் சேர்த்துக் கொண்டார் என்று தெரிகின்றது. பிந்துசாரர் இறந்த பிறகு அவருடைய குமாரராகிய அசோகர் மகத இராஜ்ஜியத்திற்கு அரசரானுர்.

சந்திரகுப்தருடைய தாயாரின் பெயர் மூரா என்று சொன்னேமல்லவா? அந்த அம்மையாரின் ஞாபகம் என்றும் நிலைத்திருக்கவேண்டிச் சந்திரகுப்த மௌரியர் என்று அழைத்துக் கொள்ளலானர். ஆகவே அந்த வமிசத்தில் வந்த அரசர்களுக்கு மௌரிய அரசர்கள் என்ற பெயர் வழங்கலாயிற்று.

மௌரிய வம்சத்து முதல் அரசர் சந்திரகுப்தராவார். அவர் அநேக தேசங்களை ஜயித்து அவைகளை எல்லாம் தம் குடையின்கீழ் கொண்டு வந்து ஆண்டிருந்தபடியால், அவரை வட இந்தியாவின் முதல் சக்கரவர்த்தி என்றே சொல்லலாம். அவருக்குப் பின்னுல் அவருடைய குமாரராகிய பிந்துசாரர் பட்டத்துக்கு வந்தார் அல்லவா? அவருக்கு 'அமிர்தகேது' 'சத்துரு நாசன்' என்னும் பெயர்களும் வழங்கி வரலாயின.

அரசர்கள் எத்தனை மனைவியர்களை வேண்டுமானுலும் கலியாணம் செய்து கொள்ளலாம் என்பது பழைய காலத்து எண்ணமாதலால் பிந்துசாரர் பதினறு மனைவியர்களைக் கலியாணம் செய்துகொண்டார் என்றும், அவர்களிடம் அவருக்கு நூற்றொரு புத்திரர்கள் உண்டானர்களென்றும் தெரிகின்றது. அந்தப் புத்திரர்களில் மூத்த குமாரனுக்குச் சுமானன் என்னும் பெயர் வழங்கி வந்தது. கடைசிக் குமாரனுக்குத் திஸ்ஸா என்னும் பெயர் வழங்கிவந்தது. நமது சரித்திரத்தின் கதைத் தலைவராகிய அசோகர் பிந்துசார மகாராஜருடைய நூற்றொரு புதல்வர்களில்

மூன்றுவது புதல்வர் என்று சரித்திராசிரியர்கள் கூறுகின்றுர்கள்.

அசோகருடைய பிறப்பைப் பற்றிய கதை ஒன்று உண்டு. அக்கதையை இங்கே கூறு கிறேன்:

அசோகருடைய தந்தையாகிய பிந்துசார மகா ராஜர் அரசாண்டுகொண் டிருக்கையில் சம் பாபுரி என்னும் ஊரில் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. அவனுக்கு ஒரு புத்திரி இருந்தாள். அவள் அதிக அழகு உள்ளவளாய் இருந்தாள். அழகோடு அவள் நற்குண நற்செய்கைகளேயும் உடையவளாய் இருந்தாள். அவளுடைய பெயர் சுபத்திராங்கி என்பதாகும்.

அந்தப் பெண் காலக்கிரமத்தில் வயதடைந் தாள். அதைக் கண்ட அந்த ஏழைப் பிராமணன் தன்பெண்ணுக்குத் தக்க வரனேத் தேடிக் கொண் டிருந்தான். அப்போது அந்தப் பிராமணன் வீட்டிற்கு ஒரு ஜோதிடர் வந்தார். அவர் சுபத் திராங்கியின் ஜாதகக் குறிப்பைப் பார்த்து அவள் கூடிய சீக்கிரத்தில் மகாராஜனுக்கு வாழ்க்கைப் படுவாள் என்றும், அவள் வயிற்றில் மகா மண்ட லீஸ்வரன் ஒருவன் தோன்றுவான் என்றும், தம் முடைய ஜோஸியம் ஒருபோதும் பொய்யாகா தென்றும் உறுதி கூறினுர். அவர் வார்த்தை களேக் கேட்ட அந்தப் பிராமணன் அதிக மகிழ்ச்சி கொண்டு தன்னுடைய குமாரியாகிய

சுபத்திராங்கியைப் பிரியமாகவும் பத்திரமாகவும் பாதுகாத்து வந்தான்.

ஒரு சமயம் பிந்துசார மகாராஜர் சுபத்திராங்கி வசித்துக் கொண்டிருந்த சம்பாபுரிக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. அப்போது அங்கிருந்த ஒருவர் அரசருக்குச் சுபத்திராங்கியின் ரூபலாவண்யங்களை அழகுபட எடுத்துக் கூறினர். அவைகளைக் கேட்ட அரசர் அத்தகைய அழகுள்ள அம்மங்கை அரண்மனையில் இருக்கத்தக்கவள் என்று கருதி அவளைத் தம்முடைய இராஜ்ஜியத்தின் தலைமைப் பட்டணமாகிய பாடலி புரத்திற்கு அழைத்துச் சென்றூர்.

அரசர் அந்தப் பெண்மீது அதிகப் பிரியங் கொண்டு அவளை நன்ருகக் கவனித்து வந்தார். அதைக் கண்ட அரசனுடைய தேவிமார்கள் அனைவரும் அந்தப் பிராமணப் பெண்மீது அழுக்காறு கொண்டார்கள்.

ஆகவே அவர்கள் சுபத்திராங்கிக்கு அரசனுக்குத் தலைவாரி முடிக்கும் வேலையைச் செய்யக் கட்டளை இட்டிருந்தார்கள். அவ்வேலையைச் சுபத்திராங்கிப் பொறுமையோடு செய்துவந்தாள். ஒருநாள் அவள் அரசருக்குத் தலைவாரிக்கொண்டிருந்தாள். அச்சந்தர்ப்பத்தில் அரசரிடத்தில் அவளைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. அதை உணர்ந்த சுபத்திராங்கி தன்னுடைய குறைகளையெடுத்து அரசருக்குச் சொல்ல அதுவே தக்க சமயமென்று கருதினள். கும்பிடப்போன தெய்

வம் குலுக்கிட்டதுபோல அரசர் சுபத்திராங்கியின் வேலையை மெச்சி அவளை நோக்கி, 'பெண்ணே! உனக்கு என்ன வேண்டும்? பயப்படாமல் சொல். நான் நீ வேண்டும் வரத்தைத் தருகிறேன்,' என்று அன்பு கனிந்த மொழிகளில் சொன்னார். அரசர் கூறிய அன்பான வார்த்தைகளைக்கேட்ட சுபத் திராங்கி தனக்கு நற்காலம் கிட்டிவிட்டதென்று கருதி அரசரை நோக்கி, 'வேந்தே, நீங்கள் என்னைத் தங்களுடைய பட்டமகிஷியாக்கிக் கொள்ள வேண்டும். இதைவிட வேறு பாக்கியம் எனக்கு என்னவேண்டும்? ஆகவே தங்களுக்குப் பிரிய மிருப்பின் தாங்கள் என்னைத் தங்களுடைய பட்ட மகிஷியாக்கிக் கொள்ளலாம்.' என்று கூறினாள். பின்னும் அவள் அரசிகளால் தனக்கு நேரிடும் கஷ்டங்களையும் விபரமாக எடுத்துரைத்தாள்.

அவள் கூறியவைகளைக் கேட்ட அரசர் சுபத்திராங்கிக்கு நேரிட்ட கஷ்டங்களுக்காக வருந்தி அவளுடைய பொறுமைக்கும், நற்குணங் களுக்கும் அவளைப் புகழ்ந்தார்.

சுபத்திராங்கி தேவமாதர்களும் நாணத்தக்க அழகைக்கொண்டு விளங்கினாள் என்று கூறுகின் றார்கள். அரசர் நாளடைவில் அவளுடைய அழகுக்கும், நற்குண நற்செய்கைகளுக்கும் அடிமைப்பட்டவராய் அவளைச் சாஸ்திரவிதிப் படி மணந்துகொண்டார். மன்னரும், சுபத்தி ராங்கியும் பூவும் மணமும் போலவும், நகமும் சதையும் போலவும் வாழ்ந்துவந்தார்கள். அவர் கள் இரண்டு உடலுடன் கூடியவர்களாய் இருந்

தபோதிலும் உயிர் ஒன்றேபோல் தங்களுக்குள் மனமாறுபாடு யாதும் இன்றி இருந்தார்கள்.

அவர்களுடைய அன்புகனிந்த பிரியமே உருக்கொண்டு வந்ததைப்போல அவர்கள் இருவருக்கும் காலக்கிரமத்தில் ஒரு புத்திர ரத்தினம் பிறந்தது. அந்தக் குழந்தையைச் சுபத்திராங்கி பிரசவித்தபோது அவளுக்கு ஒரு விதமான கஷ்டமும் ஏற்படவில்லை. ஆகவே, பெற்றோர்கள் அக் குழந்தைக்கு அசோகன் என்று பெயர் இட்டு அதை நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். இரண்டொரு ஆண்டுகள் சென்ற பிறகு சுபத்திராங்கி மற்றோர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள். அப்போதும் அவளுக்கு வேதனை ஒன்றும் ஏற்படவில்லை. ஆகவே பெற்றோர்கள் அக் குழந்தைக்கு வீதாசோகன் என்று பெயரிட்டுச் செல்வமாய் வளர்த்து வந்தார்கள்.

சுபத்திராங்கி தேவமாதர்களும் நாணத்தக்க அழகினைக் கொண்டவளா யிருந்தும், அவளுக்குப் பிறந்த குமாரராகிய அசோகர் அழகுடன் கூடியவராய் இல்லை. அவர் சிறுவயது முதற்கொண்டே தீமையானகாரியங்களைச் செய்வதில் ஆசை கொண்டவராய் இருந்தார். அவருடைய நடையுடை பாவனைகளும் பிறருடைய அன்பைப் பெறக்கூடியவைகளாய் இல்லை. எனினும் 'காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சு' என்பதற்கிணங்க சுபத்திராங்கி அவரிடத்தில் அதிகமாகப்

பட்டம் பாராட்டி வந்தாள். எனினும் அரச ருக்கு மாத்திரம் அசோகருடைய குணங்கள் பிடிக்க வில்லை. தகப்பனுர் தம் குணங்களைக் கண்டு வெறுத்தும் அவைகளை அசோகர் விடா மல் பின்பற்றிக்கொண்டே வந்தார் என்று தெரி கின்றது.

அசோகர் சிறுவயதில் தம்முடன் சேர்ந்து விளையாடும் சிறுவர்களை வேண்டுமென்றே துன் புறுத்தி அவர்கள் படுந்துன்பத்தைக் கண்டு ஆனந்தங் கொள்ளுவாராம். அதனுல் சிறுவர்கள் சிறுவராகிய அசோகரைக் கண்டால், 'இந்தத் துஷ்டன் நமக்கு என்ன தீங்கு செய்வானே?' என்று திகிலடைந்து வாட்டமடைவார்களாம்.

இலங்கைத்தீவில் அசோகரைப்பற்றி வழங் கும் கதைகளில் ஒன்றில் அவர் சிறுவயதில் மகா துஷ்டராக இருந்தார் என்று கூறப்படுகின்றது.

அசோகர் துஷ்டகுண முள்ளவராய் இருந்த படியால் அரசர் அவரைத் தலைமைப் பட்டணத் தினின்றும் அகற்றிவிட எண்ணங்கொண் டிருந் தார். அச்சந்தர்ப்பத்தில் இப்போது பஞ்சாப் என்று வழங்கும் மாகாணத்தின் குடிகள் அரச ருக்கு விரோதமாகக் கலகஞ் செய்துகொண் டிருந் தார்கள். அச் சமாசாரம் அரசருக்கு எட்டவே அரசர் அக் கலகத்தை அடக்கி வரும்படி அசோ கரை அனுப்பினுர். அசோகரும் தந்தையினு டைய கட்டளையை ஏற்றுத் தட்சசீலம் என்னும் பஞ்சாப் மாகாணத்திற்குச் சென்ருர்.

அரசிளங்குமாரர் வருகையைக் கண்ட தட்ச சீலவாசிகள் அரசிளங்குமாரரைப் பலவித மரியாதைகளுடன் எதிர்கொண்டழைத்து அவருக்கு அநேகம் காணிக்கைகளைச் சமர்ப்பித்தார்கள். தட்சசீல வாசிகள், தங்களை ஆண்டுவரும் அதிகாரி தங்களை உபத்திரவப் படுத்தினர் என்றும், ஆகவே அவருக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டிய அவசியம் தங்களுக்கு ஏற்பட்டதென்றும், மகத தேசாதிபதியாகிய பிந்துசார மகாராஜரிடத்தில் தங்களுக்கு யாதொரு குறையும் கிடையாதென்றும் முறையிட்டுக் கொண்டார்கள்.

அசோகருக்கு அவர்களுடைய குறைகள் முறையானவை என்று தோன்றவே அவர் அவர்களுக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்வதாக வாக்களித்து அவ் விடத்திலேயே சிறிது காலம் இருந்து அவர்களுடைய கஷ்டங்களை நீக்கி அவர்களுக்குச் சுகத்தை உண்டாக்கினர், அசோகர் தட்சசீலத்தில் இருந்தபோது காஷ்மீர் மாகாணத்தையும் தம் இராஜ்ஜியத்துடன் சேர்த்துக் கொண்டார்.

தட்சசீலத்தில் ஏற்பட்ட கலகங்களை அடக்கிக் காஷ்மீர் மாகாணத்தையும் தம் இராஜ்யத்துடன் சேர்த்ததைக் கண்ட பிந்துசார மகாராஜர் அசோகர்மீது சந்தோஷங்கொண்டு அவரை உஜ்ஜயினி எனும் ராஜ்ஜியத்திற்குத் தலைவராக நியமித்தார்.

பண்டைக் காலத்தில் அரசர்கள் தங்களுடைய குமாரர்களை மாகாணங்களின் அதிபதிகளாக நியமிக்கும் வழக்கம் இருந்து வந்தது.

ஆகவே பிந்துசார மகாராஜர் உஜ்ஜயினிக்குத் தமது குமாரர் அசோகரைத் தலைவராக்கினர்.

உஜ்ஜயினி இராஜ்ஜியத்தின் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ள அசோகர் தட்சசீலத்தை விட்டுப் போகும் வழியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதைக் குறித்துச் சிறிது இவ்விடத்தில் சொல்லுகிறேன்:

தட்சசீலத்தி லிருந்து உஜ்ஜயினிக்குப் போகும் மார்க்கத்தில் சைத்தியகிரி என்னும் ஒரு பட்டணம் உண்டு. அந்த ஊரில் ஒரு வர்த்தகன் இருந்தான். அவனுக்கு அழகில் சிறந்த தேவி என்னும் புத்திரி ஒருத்தி இருந்தாள். அவளைக் கண்டு அசோகர் விரும்பி அவளைக் கலியாணஞ் செய்து கொண்டார். அவருக்கு ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். புத்திரனுடைய பெயர் மகேந்திரன் என்பதாகும். புத்திரியினுடைய பெயர் சங்கமித்திரை என்பதாகும்.

உஜ்ஜயினி நகரானது சாதாரணமானதன்று. அது பூர்வகாலந் தொட்டுச் சிறப்புற்றோங்கி இருக்கின்றது. இந்துக்களுக்கான ஏழு புண்ணிய பூமிகளில் உஜ்ஜயினியும் ஒன்றாகும். இந் நகருக்குப் பூர்வ காலத்தில் அவந்தி என்னும் பெயர் வழங்கி வந்தது. இந்த உஜ்ஜயினி பட்டணத்தில் பெரிய நட்சத்திர ஆபீஸ் ஒன்று இப்போது இருக்கின்றது. இந்தியாவின் மணிக் கணக்கு இப் பட்டணத்தின் மணிக் கணக்கைப் பிரதானமாகக் கொண்டே கணக்கிடப்பட்டு வருகின்றது.

மௌரிய அரசர்களுடைய காலத்தில் இப்பட்டணமானது வியாபாரத்திலும், வர்த்தகத்திலும் சிறப்புற்று இருந்தது.

அசோகர் உஜ்ஜயினில் இருந்துகொண்டு இராஜ்ஜியாதிகாரம் செலுத்துபவரானார். இவர் இப்படி இருக்கையில் தட்சசில வாசிகள் மறுபடியும் கலகம் செய்தார்கள். அதைக் கேட்ட அரசர் தம் மற்றொரு புத்திரனாகிய சுமானனைப் பெருஞ் சேனையுடன் தட்சசீலத்திற்கு அனுப்பினார். சுமானன் தந்தையினுடைய கட்டளையை ஏற்றுத் தட்சசிலத்திற்குச் சென்றார். ஆனால் அவனால் கலகத்தை அடக்க முடியவில்லை.

விஷயங்கள் இவ்வாறு இருந்துகொண்டிருக்கையில் பிந்துசார மகாராஜர் நோய்வாய்ப்பட்டு இறக்குந்தருவாயில் இருந்தார். அதைக் கண்ட பிந்துசாரர் உஜ்ஜனியில் இருந்துவரும் அசோகரைத் தட்சசீலத்துக்கு அனுப்பிவிட்டுத் தட்சசிலத்திலிருந்த சுமானனைப் பாடலிபுரத்திற்கு வரும்படி செய்தி அனுப்ப வேண்டுமென்று தம் மந்திரிகளுக்குக் கட்டளை யிட்டார்.

மேற்கூறிய விஷயங்கள் நடை பெறுவதற்குப் பலவாண்டுகளுக்கு முன்னால் ஒரு சமயம் சுமானன் அரண்மனைத் தோட்டத்தி லிருந்து அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்தான். அப்போது பிந்துசார மகாராஜருடைய பிரதம மந்திரியாகிய காலதாகன் என்பவன் அவன் எதிரில்

தென்பட்டான். அவன்பிரதம மந்திரி என்பதைச் சுமானன் உணராமல் பால்ய சேஷ்டை காரணமாகத் தன் செருப்புகளைக் கழற்றி அம் மந்திரியின் தலைமீது வீசி எறிந்தான். அதைக் கண்ட பிரதம மந்திரி அன்றுமுதல் சுமானன்மீது வெறுப்புக் கொண்டு அவனை எப்படியாவது பட்டத்திற்கு வரவொட்டாமல் தடுத்துவிடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அநேகமந்திரிகளைத் தன் வசப்படுத்திக்கொண்டு சமயம் நேரும்போது அரசிளங் குமரனுக்குக் கேடு சூழ எண்ணியிருந்தான்.

இப்போது சுமானனை வரவழைக்க வேண்டும் என்ற அரசர் கட்டளையை ஏற்றுக்கொண்டவுடன் மந்திரி தன் எண்ணம் நிறைவேறுதற்குரிய காலம் நெருங்கி விட்டதென்று கருதிச் சுமானனை வரவழைக்காமல் அசோகனை வரவழைத்து அரசர் முன் நிறுத்தினன் என்றும், அசோகனைக் கண்ட அரசர் மனம் உடைந்து மாண்டு போனர் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

மற்ெருரு சாரார் பிந்துசார மகாராஜர் சுமானன் திரும்பி வரும்வரையில் அசோகர் இராஜ்ஜியத்தை நிர்வகித்து வரவேண்டுமென்றும், சுமானன் தட்சசீலத்திலிருந்து திரும்பி வந்தவுடன் இராஜ்ஜியத்தை அசோகர் சுமானன் இடத்தில் ஒப்புவித்து விடவேண்டுமென்றும் கூறியதாகக் கூறுகின்றனர்.

விஷயங்கள் எவ்வாறு இருப்பினும் பிந்துசார மகாராஜருக்குப் பிறகு இராஜ்ஜியத்தைஅசோ

கரே கைப்பற்றிக் கொண்டார் என்பதில் சந்தேகம் இல்லை. எனினும் அரசாட்சியைக் கைக்கொள்ளு வதற்கு முன் அசோகர் அநேகம் காரியங்களைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதென்றும், சுலபமாக அவருக்கு இராஜ்ஜியம் கிடைத்துவிட வில்லை யென்றும் தெரிகின்றது.

பிந்துசார மகாராஜர் இறந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடன், மகாராஜரு டைய மூத்தபிள்ளையாகிய சுமானன் ஒரு சேனை யைத் திரட்டிக் கொண்டு பாடலிபுரத்தை நோக்கிச் செல்வானாயினான். இச் சந்தர்ப்பத்தில் பாடலி பு த்தில் அசோகருக்குப் பெருந் துணை புரிந்துகொ ண்டிருந்தவர் இராதா குப்தர் என்னும் மந்திரியா வர். அவரும், அசோகரும் சேர்ந்து பிந்துசார மகாராஜருடைய பெரிய படையைத் திரட்டிச் சுமானனை எதிர்க்கக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

சுமானன் பாடலிபுர நகர வாயிலை அடைந் தான். சுமானனுக்கும், அசோகருக்கும் சண்டை ஏற்பட்டது. அசோகருடைய சைனியம் தொகை யில் சுமானனுடைய சைனியத்தைக் காட்டிலும் எத்தனையோ பங்கு அதிகமாய் இருந்ததனால் சுமா னன் சுலபத்தில் தோற்று விட்டான்.

வெற்றி அடைந்த அசோகர் தமக்குப் பல வகைகளிலும் கேடு சூழ நினைத்த தம்முடைய சகோதரர்களையும், உற்றார் உறவினர்களையும் கொ ல்லும்படியாகத் தம் சேனை வீரர்களில் ஒருவனுக் குக் கட்டளையிட்டார் என்றும், ஆனால் அச் சே

னிரன் அக்கட்டளையை நிறைவேற்ற இஷ்டப் படாமற் போகவே அசோகரே வாளைக்கொண்டு தம் சகோதரர்களையும், உற்றார் உறவினர்களையுங் கொன்று அகங்களித்தார் என்றும் சொல்லப் படுகின்றது. அரசருடைய தம்பிகளில் ஒருவனாகிய திஷ்யன் என்பவன் சந்நியாசியாகப் போய்விட்டபடியால் அவனை மாத்திரம் அசோகர் கொல்லாது விட்டார் என்று தெரிகிறது.

அசோகரைப் பற்றி நாம் அறிந்துகொள்வதற்கு ஆதாரமாய் உள்ளவை அவருடைய சிலா சாசனங்களும், கல்வெட்டுக்களுமாகும். இத்தகைய சாதனங்கள் இல்லாவிட்டால் நாம் அசோகரைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியாது. அசோகர் தாம் எழுதிவைத்துள்ள இரண்டொரு சிலா சாசனங்களில் தமது தம்பிகளும் தங்கைகளும் தமதுகாலத்தில் ஜீவித்திருந்ததாகச் சொல்லுகின்றார். ஆகவே அசோகர் தாம் பட்டத்துக்கு வந்தவுடன் தம்முடைய சகோதரர்களையும், தங்கைகளையும் கொன்றுவிட்டார் என்று நிர்மானமாய் எண்ணிவிடுவதற்கில்லை.

சுசீமன் தோற்றுவிட்டானல்லவா? அவனை அசோகர் கொன்றுவிட்டார் என்று ஒரு சாரரும், அவன் ஏதோ ஒரு மந்திர சக்தியினால் எண்ணெய்க் கொப்பரையில் யாராலோ தள்ளப்பட்டு அதில் மூழ்கி இறந்தான் என்று மற்றொரு சாரரும் இவ்வாறு பற்பல விதமாகக் கூறுகின்றனர்.

சுசீமன் இறந்தபோது அவனுடைய மனைவி பூரண கருப்பவதியாய் இருந்தாள். அவள் அசோ

காராலேற்பட்ட ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காகத் தன் கணவன் இறந்தவுடன் அரண்மனையிலிருந்து தப்பி ஓடித் தலைமைப் பட்டணத்தின் கிழக்கு வாயிலைச் சேர்ந்த ஒரு கிராமத்திற்குச் சென்று அங்கே வசித்துக்கொண்டிருந்த தாழ்ந்த வகுப்புத் தலைவன் ஒருவன் வீட்டில் அடைக்கலம் புகுந்தாள். அவளுடைய பரிதாப நிலைக்கு இரங்கிய அத்தலைவன் அவளுக்கு ஆறுதல் அளித்து அவளைத் தன் சகோதரியைப்போலும், தாயைப்போலும் எண்ணி ஏழுவருஷகாலம் காப்பாற்றி வந்தான். அவள் அரண்மனையை விட்டு வெளியேறிய தினத்திலேயே அந்தத் தாழ்ந்த ஜாதித் தலைவனுடைய வீட்டில் ஒப்பற்ற ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தனள். அக் குழந்தைக்கு நிக்ரோதன் என்னும் பெயர் இடப்பட்டது. அக்குழந்தை பிறந்தபோதே தெய்வீகமான வசீகரத் தோற்றத்துடன் விளங்கியது. இவ்வாறு பிறவியிலேயே சிறந்த தோற்றத்துடன் விளங்கிய அக் குழவியானது மேற்கூறிய அத் தாழ்ந்த ஜாதித் தலைவனுடைய வீட்டிலேயே வளர்ந்து கொண்டிருந்தது.

அசோகர் சிறுவயது முதற்கொண்டே முரட்டுக் குணத்தைக் கைக்கொண்டிருந்தார். அம்முரட்டுக் குணம் அதிகார தோரணைக்குத் தக்கபடி பின்னுமதிகரித்துக் கொண்டு போயிற்றென்பது பற்பல உதாரணங்களால் தெரிகின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் அசோகருடைய மந்திரிமார்களில் ஐந்நூறுபேர் அசோகர் செய்த ஒரு

காரியத்தைக் கண்டித்துப் பேசினார்கள். அதைக் கண்ட அசோகர் அம்மந்திரிகளின்மீது கோபங் கொண்டு அவர்களுடைய தலைகளையெல்லாம் தம் கைப்படவே கொய்து எறிந்துவிட்டாராம்.

அசோகர் அழகுள்ளவரல்லர் என்றோமல்லவா? ஒருநாள் அரண்மனையைச் சேர்ந்த ஐந்நூறு பணிப்பெண்கள் ஏதேதோ விஷயங்களை எடுத்துப் பேசிக்கொண்டிருந்தவர்கள் அசோகருடைய அழகற்ற தோற்றத்தைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தார்களென்றும், அப்போது ஏதோ ஒரு விஷயங் காரணமாய் அரண்மனையை நாடிவந்த அசோகர் அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயங்களைக் கேட்டு அவர்கள்மீதுவெறுப்புக் கொண்டவராகி அவர்கள் ஐந்நூறு பேரையும் உயிருடன் கொளுத்திவிடக் கட்டளையிட்டார் என்றும் தெரிகின்றது. அசோகரால் மிகவும் பாராட்டப் பட்டு வந்த ஓர் அசோகமரத்தின் இலைகளைப் பறித்து நாசப்படுத்தியதற்காக அரசர் அந்த ஸ்திரீகள் மீது கோபங்கொண்டு அவர்களுக்கு மரண தண்டனை விதித்தார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

அசோகர் தமக்குள்ள செல்வாக்கையும், அதிகாரத்தையுங் கண்டு தமக்கு மிஞ்சிய அரசர் எவரும் வட இந்தியாவில் இல்லையென்று கர்வித்துத் தாமே இந்திரன் என்றும், தம் இராஜதானியாகிய பாடலிபுரமே அமராவதி என்றும் எண்ணிக் கொண்டிருந்தார் என்று தெரிகிறது.

அசோகருடைய இத்தகைய எண்ணங்களைக் கண்ட மந்திரிமார்கள், 'மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்,' என்னும் வசனத்திற்கு இணங்கத் தங்களுடைய உயிரையும் பொருளாக மதியாமல் அரசனை அணுகி, "வேந்தே! நாங்கள் கூறும் விண்ணப்பத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளக் கோருகின்றோம். தாங்கள் தங்களுடைய கையினாலேயே குற்றவாளிகளைத் தண்டிப்பது அவ்வளவு முறையானதாகத் தெரியவில்லை. தங்களுடைய கட்டளைக்கு இணங்கி அதை நிறைவேற்றுவதற்கு ஓர் அதிகாரியைத் தாங்கள் நியமித்தல் சாலச் சிறப்பாகும்," என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

மந்திரிகள் எடுத்துக் கூறியவை முறையானவை என்று அரசர் நினைத்தார். ஆகவே அரசர்தம்முடைய கட்டளைகளை நிறைவேற்ற ஓர் உத்தியோகஸ்தனை நியமித்தார். அந்த உத்தியோகஸ்தனுடைய வேலை அரசரால் கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டவர்களைக் கொலைக் களத்தில்கொண்டுபோய்க் கொன்றுவிடுவதாகும். இத்தகைய உத்தியோகத்தை ஏற்றவன் அன்பு, இரக்கம்,ஜீவதயை முதலியன சிறிதும் இல்லாத கல்நெஞ்சனுவன். அவன் தன்னுடைய தாயையும், தகப்பனையும் கொன்றவன்!

அரசனுல் ஏற்படுத்தப்பட்ட கொலைக்கூடமானது அழகியதோர் உத்தியான வனத்தின் மத்தியில் அமைக்கப் பட்டிருந்தது. அதைக் கண்டவர்கள் அனைவரும் அது ஓர் ஆசிரமம் என்றே கருதும்படியாய் அது மிக அழகுடன்

விளங்கியது. முதலில் கொலைக் குற்றஞ் சாட்டப் பட்டவர்களை அக்கொலைக் கூடத்தில் தள்ளப் பட்டுவந்தார்கள். பிறகு அக்கொலைக்கூடத்தை ஓர் ஆசிரமமாகக் கருதி, அதனுள் நுழைந்தவர் ஒருவரும் உயிருடன் வெளியேறியதாகத் தெரியவில்லை. நியாயாதிகளான அநேக மாந்தர்கள் அக்கொலைக் கூடத்தை யாரோ முனிவரொருவர் வாசஞ் செய்யும்படியான ஆசிரமம் என்று கருதி அதனுள் நுழைந்து பற்பல விதமான கொடுமைகளுக்கு உட்பட்டுத் தங்களுடைய இன்னுயிரை மாய்த்துக்கொண்டார்கள்.

பால பண்டிதர் என்னும் நாமத்தைக் கொண்ட முனிவர் ஒருநாள் நாம் மேற்கூறிய கொலைக் கூடத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். வெயிலின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் அம் முனிவர் அக்கொலைக்கூடத்தை உற்று நோக்கினார், அக்கொலைக்கூடம் ஓர் அழகிய பூங்காவின் மத்தியில் அமைக்கப்பட்டு இருந்ததையும், அப்பூங்காவில் ஆங்காங்குத் தடாகங்கள் பிரகாசித்துக்கொண்டு இருந்ததையும் கண்டு அந்த முனிவர் அதனைத் தம்மைப் போன்ற ஓர் இருடியின் வாசஸ்தலம் எனக் கொண்டு அதனுள் பிரவேசித்தார். உடனே அக்கொலைக்கூட அதிகாரி அவரைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டான். அதைக் கண்ட அம்முனிவர் திடுக்கிட்டுத் தம்மைப் பிடித்துக்கொண்டிருந்த மனிதனை நோக்கி, 'ஐயா! யான் செய்த குற்றம் யாது? என்னைத் தாங்கள் இவ்வாறு பிடித்துக்கொண்டு

இருப்பதன் காரணம் என்ன?' என்று வினவினர். அவர் கூறியவைகளைக் கேட்ட அந்த உத்தியோகஸ்தன் அவரை நோக்கி 'ஐயா, இது அரசனுடைய கட்டளை. இந்த உத்தியான வனத்தில் நுழைகிறவர்களையெல்லாம் கொலைக்கூடத்திற்கு இட்டுக்கொண்டுபோய்ப் பற்பலவிதமான நரக வேதனைகளுக்கு அவர்களை உட்படுத்தி அவர்களுடைய உயிரை மாய்த்துவிடுவதே எங்கள் வேலையாகும்,' என்றான். அவன் இவ்வாறு கூறியவைகளைக் கேட்ட அந்தப் பௌத்த சந்நியாசியானவர் வேறு வழி ஒன்றும் இல்லை என்று கருதியவராய் அவனை நோக்கி, 'அப்பா, தண்டனையை ஏற்றுக் கொள்ள நான் சிறிதும் வருந்தவில்லை. நான் இறைவனைப் பிரார்த்திப்பதற்குச் சில தினங்கள் வரை எனக்கு அவகாசம் கொடுக்கும்படி உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்குப் பிறகு என்னை என்ன வேண்டுமானாலும் நீங்கள் செய்யுங்கள்,' என்றார். அதன் படியே அவருக்கு அவகாசம் கொடுத்துப் பிறகு அந்தச் சந்நியாசியை அக்கொலைக்கூட உத்தியோகஸ்தன் கொதிக்கும் ஓர் பெரிய எண்ணெய்க் கொப்பரையில் தூக்கித் தள்ளினான்; நெருப்புச் சுவாலையோ நெடுந்தூரம் வீசியது.

கொஞ்சநேரம் கழித்து முனிவருடைய கதியாதாயிற்று என்பதைக் கவனிக்க அந்த உத்தியோகஸ்தன் அக்கொப்பரையினுள் பார்க்கலானான். என்னே ஆச்சரியம்! அவன், முனிவரானவர் கொழுந்துவிட்டு எரிகின்ற தீயின்மேல் வைக்

பட்டிருந்த எண்ணெய்க் கொப்பரையினுள் குளிர்ச்சி பொருந்திய தாமரைத் தடாகத்தினுள் உட்கார்ந்துகொண்டு இறைவனைத் துதித்துக் கொண்டு இருப்பவரைப்போல வீற்றிருந்த காட்சியைக் கண்டு ஒன்றுந் தோன்றாதவனாய் மெய் நடுங்க ஓடிச் சென்று தான் கண்ட அதி அற்புதத்தை அசோகருக்குச் சொல்ல வாயெழாமல் நாக்குழறி மெய்மறந்து ஸ்தம்பம்போல அவர் எதிரில் நின்றான்.

கொலைக்கூட உத்தியோகஸ்தன் என்றும் இல்லாதவிதமாய் தம் எதிரில் அன்று நின்று கொண்டிருந்த காட்சியைக் கண்ட மன்னர் திடுக்கிட்டு அவனைச் சமாச்சாரம் என்னவென்று பன்முறை வினவினார். பிறகு அந்த உத்தியோகஸ்தன் தனக்கு எற்பட்ட ஒரு நடுக்கத்தைப் போக்கிக் கொண்டு அரசரை நோக்கிப் பூங்காவில் நடந்த விசேடங்களை ஆதியோடந்தமாக எடுத்துக்கூறிக் கைகட்டி வாய் புதைத்து அரசருடைய கட்டளைக்கு எதிர்பார்த்திருந்தான்.

கொலைக்கூட அதிகாரியினுடைய வார்த்தைகளைக் கேட்ட அரசரும் ஒன்றும் தோன்றாதவராகிச் சிறிது நேரம் ஒன்றும் பேசாது இருந்தார். பிறகு அவர் ஒருவாறு தெளிந்து அக்கொலைக் கூட உத்தியோகஸ்தனோடு கொலைக் கூடத்திற்குச் சென்றார். அங்கே முனிவர் வீற்றிருந்த கோலத்தை அரசர் கண்டார்; மெய்சோர்ந்தார்; செய்வது இன்னதெனத் தோன்றாமல் விழித்தார்.

பின்னர் அரசர் ஒருவாறு தேறி அந்த முனிவரை அந்தப் பாண்டத்தினின்றும் வெளியே எடுப்பித்தார். பிறகு அரசர் முனிவருடைய பொற் பாதங்களில் வீழ்ந்து அறியாமல் செய்த குற்றத்திற்காகத் தம்மை மன்னித்தருள வேண்டுமென்று அவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

முனிவரும் அரசனுடைய அறியாமைக்காக அவர் மீது இரக்கப்பட்டு, அவர் செய்த குற்றங்களை மன்னித்து அவரை ஆசிர்வதித்து, அவரை நோக்கி, 'இனி இத்தகைய இழி தொழில்களில் பிரவேசிக்கவேண்டாம்', என்று சொன்னார்.

அவர் தமக்கு எடுத்துக்கூறிய வார்த்தைகளை அரசர் வேத வாக்கியங்களாகக் கொண்டு அன்று முதல் கொடுஞ்செயல் செய்வதினின்றும் நீங்கிச் சன்மார்க்க வழியில் நடக்கலானார்.

அரசர் அக்கொலைக்கூடத்தை இடித்துத் தள்ளி அது இருந்த இடத்தில் உண்மையிலேயே பூங்காவனம் ஒன்றை அமைத்தார்.

கொலைக்கூட அதிகாரி கல்நெஞ்சன் என்று கூறினோமல்லவா? அவனை அரசர் உயிரோடு கொளுத்திவிட்டார் என்று தெரிகிறது.

நாம் மேலே கூறிய பௌத்த சந்யாசியே அசோகருக்குப் பகவான் புத்தருடைய உபதேசங்களை எடுத்துக் கூறினார் என்று தெரிகிறது.

புத்தருடைய உபதேசங்கள் கங்கை யமுனை முதலிய பிரதேசங்களுக்கு இடையில் மாத்திரம்

புத்தருடைய காலத்தில் பரவியிருந்தது. ஆகையினுல் இந்தியாவின் விஸ்தீரணத்தையும், ஜனத்தொகையையும் கவனிக்குமிடத்து முதலில் பௌத்த மதமானது இந்தியாவில் அதிகமாய்ப் பரவவில்லை என்றே கூறிவிடலாம். வடஇந்தியாவில் ஆரிய மதமே மௌரியர்களுடைய காலத்தில் பிரபலமாய் இருந்தது. ஆகவே அசோகரும் தம் இளமைப் பருவத்தில் ஆரிய தருமத்தைக் கைக்கொண்டு ஒழுகி வருபவராஞர். அவருக்குச் சிவபிரானிடத்தில் அளவுகடந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது. அவர் தம் தகப்பஞரைப்போலவும், தம் பாட்டஞரைப் போலவும் தினந்தோறும் அறுபதிஞயிரம் பிராமணர்களுக்கு மகேஸ்வர பூசை நடத்தி வந்தார்! அவர் க்ஷத்திரிய வம்சத்தினராதலால் வேட்டையாடுவதில் மிகவும் சிறந்து விளங்கிஞர். அவர் பௌத்த மதத்தைத் தழுவுவதற்கு முன் மாமிச போசனத்தையும், மயக்கந்தரும் பானங்களையும் உட்கொண்டு வந்தார். அசோகர் வருடந்தோறும் தம்முடைய பட்டாபிஷேகதினக் கொண்டாட்டத்தன்று கொலைக்குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை பெற்றவர்களை மன்னித்து அவர்களை விடுதலை செய்வது வழக்கம்.

அசோகர் பட்டத்துக்கு வந்தவுடன், 'தேவனும்பியா,' 'பியதாசி' முதலான பட்டப்பெயர்களைச் சூடிக்கொண்டார். தேவனும்பியா என்னும் பதத்திற்குத் தேவர்களுக்குப் பிரியன் என்று அருத்தம்.

பியதாசி என்னும் பதத்திற்கு அழகிய தோற்றத்தையுடையவன் என்று அருத்தமாம்!

அசோகர் பௌத்த மதத்தைத் தழுவுவதற்கு முன் மகத இராஜ்ஜியம் இருந்த நிலையைக் குறித்துச் சற்று ஆராயவேண்டியதாய் இருக்கின்றது.

அசோகர் பௌத்தராவதற்கு முன் ஜனங்கள் எழுவகைப் பிரிவினராய்ப் பிரிக்கப்பட்டு இருந்தார்கள். முதல் வகுப்பைச் சேர்ந்த பிரிவினர் தத்துவஞானிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர். அவர்களுடைய தொகை சிறியதாய் இருந்தபோதிலும் ஜனங்கள் அவர்களை அதிகமாகக் கௌரவித்து வந்தார்கள். அவர்கள் வேலை செய்யவேண்டுமென்ற நியதி இல்லை. அவர்களுக்கு வரி முதலானவைகள் கிடையா. யாகம் முதலானவைகளை நடத்துவதும், இறைவனைத் துதித்துக்கொண்டு இருப்பதும் அவர்களுடைய வேலைகளாகும். இரண்டாவது வகுப்பினர் கிருஷிகர் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர். அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாய் இருந்தது. அவர்கள்தாம் அதிகமான வரிகளைக் கொடுக்கவேண்டியவர்களாய் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய நில வருமானத்தில் நாலில் ஒரு பங்கை அரசருக்கு வரியாகச் செலுத்தி வந்தார்கள். மூன்றாவது வகுப்பினர் இடையர்களும், வேடுவர்களும் ஆவார். அவர்கள் கீழ்த்தரமான வேலைகளைச் செய்து வந்தார்கள், நான்காவது வகுப்பினர் வியாபாரிகளும், கொல்லத்து

காரர்களும், படகோட்டிகளும் ஆவார். இவர்களும் அரசருக்கு வரி செலுத்திக்கொண்டு வந்தார்கள். ஐந்தாவது வகுப்பினர் இராணுவ வீரர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுடைய தொகையும் அதிகமாய் இருந்தது. இவர்களுக்குச் சண்டைக் காலங்களில் தவிர மற்ற காலங்களில் வேலை ஒன்றும் கிடையாது. ஆகவே இவர்கள் தங்களுடைய காலத்தை வீண் வழிகளில் கழித்து வந்தார்கள். ஏழாவது வகுப்பினர் அரசருக்கு மந்திராலோசனை கூறுபவராவர். இந்த வகுப்பினரிலிருந்தே அரசர் இராஜாங்க நிர்வாகத்துக்கு வேண்டிய அதிகாரிகளை யெல்லாம் நியமிப்பது வழக்கமாயிருந்து வந்தது.

அசோகருடைய அவைக்களமானது நமது நாட்டு மற்ற அரசர்களுடைய அவைக்களங்களுக்குச் சற்றும் கீழ்ப்பட்டதாயில்லை. அது எல்லாவித ஆடம்பரங்களும், அட்டகாசங்களும் நிரம்பியதா யிருந்தது. அரசரேயன்றி அவருடைய தாசிகளும் தங்கப் பல்லக்கில் ஏறிச் செல்வர். அரசாங்க சம்பந்தமான ஊர் வலங்களில் இந்தத் தாசிகள் அணிந்துகொள்ளும் ஆடை ஆபரணங்கள் பட்டத்து இராணியினுடைய ஆடை அணிகளுக்குச் சமமாய் இருக்கும். எப்போதும் அரசரைச் சூழ்ந்து இத்தாசிகளும், ஸ்திரீ வில்லாளிகளும் இருப்பார்கள். அரசர் வேட்டையாடச் செல்லும்போது இவர்களும் அரசருடன் இருந்து அவருக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட பாதையில் வேறு ஒருவரும் பிரவேசியா வண்ணம் பார்த்துக்

கொள்ளுவார்கள். அரசர் செல்வதற்கெனச் செய்யப்பட்ட பாதையின் வழியாகச் செல்லுகிறவர்களுடைய தலையானது துணிக்கப்படும். அரசர் ஒரு வண்டியில் குதிரைகளையும், எருதுகளையும் கட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது வழக்கமாய் இருந்தது. சூதாட்டத்திலும் அரசரும், அரசரைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய காலத்தைச் செலவழித்து வந்தார்கள். யானைச் சண்டைகளும், காண்டாமிருகச் சண்டைகளும், எருதுச் சண்டைகளும் விசேஷமாய் நடைபெற்று வந்தன.

இந்த நிலையில் இருந்த அசோகர் புத்த மதத்தை எப்படி மேற்கொண்டார் என்பதைக் குறித்துச் சிறிது கவனிப்போம். அசோகர் தம் சகோதரனாகிய சுசீமனைக்கொன்றுவிட்டாரென்றும், அப்போது அச்சுசீமனுடைய மனைவி பூரண கருப்பவதியாய் இருந்தாளென்றும், அவள் தன் உயிரைக்காப்பாற்றிக்கொள்ளும் நிமித்தம் பாடலிபுரத்திற்கு அருகிலிருந்த ஒரு தாழ்ந்த ஜாதியான் வீட்டிற்குச்சென்று அவனிடம் அடைக்கலம் புகுந்தாளென்றும், அடைக்கலம் புகுந்த தினத்திலேயே அவள் சர்வ லட்சணங்களோடும் கூடிய ஓர் ஆண்மகவையீன்றெடுத்தாளென்றும், அத்தாழ்ந்த ஜாதியினனால் அவள் அவளது குழந்தையாகிய நிக்ரோதன் என்பவனோடு எழு வருஷகாலம் காப்பாற்றப்பட்டு வந்தனள் என்றும் கூறினோமல்லவா?

நிக்ரோதன் என்ற அச்சிறுவன் வாலிப பருவத்தை யடைந்தவுடன் பௌத்த தருமத்தில் ஈடு

பட்டுச் சந்யாசியானான். பிறகு அவன் ஒரு நாள் அசோகரின் அரண்மனை வழியாகச்சென்றுகொண் டிருந்தான். அவனுடைய தூய முகத்தைக் கண்ட அரசர் அவன் மீது அன்புகொண்டு அவனைத்தம் வேலைக்காரர்கள் மூலமாகத் தம்மிடத்திற்கு வரவ ழைத்தார். அவனும் அரசருக்கு முன் சென்று நின்றான். அவனைக் கண்டவுடன் அசோகர் அவனை நோக்கி, 'தங்களுக்கு இஷ்டமான ஆச னத்தில் அமருங்கள்,' என்றார். அரசர் கூறிய அவ்வசனங்களைக் கேட்ட பால சந்நியாசி நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்துத் தன்னைத் தவிர வேறு ஒரு சந்நியாசியும் அந்த இடத்தில் அந்தச் சமயத்தில் இல்லையென்பதை உணர்ந்து அரச ருடைய அரியாசனத்தில் போய் உட்கார்ந்தான். அதைக் கண்ட அசோகர் அவனை உபசரித்து அவனுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து அவனைக் கௌரவப்படுத்தினர்.

பின்னர் அரசர் அச்சந்நியாசியை நோக்கிப் பௌத்த மதத்தைக் குறித்த விஷயங்களைத் தமக்கு எடுத்துரைக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார். உடனே அந்த வாலிப சந்நியாசி அரசருக்குப் பௌத்த மதத்தின் உண்மைகளை எடுத்துரைத் தான். அவைகளைக்கேட்ட அரசர் புத்தரிடத்தும், அவருடைய கொள்கைகளினிடத்தும் ஆர்வம் கொள்வாராயினர். அரசர் அன்று முதல் பௌத்த மதத்தை மேற்கொண்டு ஒழுகிவரலானர் என்பது ஒரு சாரார் கொள்கை.

மற்ெறாரு சாரார் அசோகருக்குப் புத்த மதத்தில் ஆர்வம் ஏற்பட்டதற்கு வேெறாரு காரணம் கூறுகின்றனர். ஆகவே அதைக் குறித்தும் சற்று இங்கே ஆராய்வோம்.

உவாங்சியாங் என்பவர் சீனு தேசத்து யாத்திரிகராவர். அவர் இந்தியாவுக்கு வந்து புத்தமத ஸ்தலங்களைத் தரிசித்துவிட்டுப் பிறகு இந்தியாவின் பலபாகங்களிலும் சுற்றுப் பிரயாணஞ்செய்து தாம் அறிந்த செய்திகளை எழுதி ஒரு நூலாகத் தொகுத்து இருக்கின்றார். அந்நூலிலிருந்து நாம் அநேக விஷயங்களை அறிந்து கொள்ளக் கூடியவர்களா யிருக்கின்றோம். உபகுப்தர் என்னும் பெயரினைக்கொண்ட பௌத்த பிட்சுவின் முயற்சியினுல்தான் அசோகர் பௌத்த மதத்தைத் தழுவினார் என்று உவாங்சியாங் தம் நூலில் திட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

உபகுப்தர், வட மதுரையில் வசித்துக்கொண்டிருந்த வாசனைத் திரவிய வியாபாரியாகிய குப்தருடைய குமாரர் ஆவர். இவர் வைசிய குலத்தைச் சேர்ந்தவர். இவர் தமது பதினேழாவது வயதில் பௌத்த பிட்சுவாகி இருபதாம் வயதில் 'அர்ஹத்' என்னும் மகா உன்னத பதவியை அடைந்தார். இவர் மலைக் குகைகளில் வசித்துக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருக்கும் இயல்புடையவராவர்.

உபகுப்தர் பௌத்த மதத்தைக்குறித்து எடுத்துக் கூறிய விஷயங்கள் அசோகரின் மனத்தைக் கொள்ளை கொண்டன. ஆகவே அசோகர்

உபகுப்தரைத் தம் மாளிகையிலேயே இருக்குமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு உபகுப்தர் ஒப்புக் கொண்டா ரில்லை. ஆகவே அசோகர் தமது இராஜ்ஜியத்தில் அவருடைய வாசஸ் தானத்திற் கென ஒரு குகையை ஏற்படுத்திக்கொடுத்தார். அக் குகையில் உபகுப்தர் இருந்துகொண்டு தியானஞ் செய்வதிலும், பரோபகாரமான காரியங்களைச் செய்வதிலும் தம்காலத்தைக் கழித்துவந்தார்.

அசோகருக்குப் பௌத்தமதத்தின் மீது ஆர் வம் ஏற்படவே, அவர் பௌத்தமத சம்பந்தமான க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்யவேண்டு மென்று எண்ணி அதைத் தம் குருவாகிய உபகுப் தரிடம் எடுத்துரைத்தார். அதற்கிணங்கி உபகுப் தரும் அரசருடன் பௌத்தமத க்ஷேத்திரங்களைத் தரிசிக்கச் செல்வாராயினர்.

அசோக மகாராஜரும், உபகுப்தரும் முதன் முதலில் க்ஷேத்திரப் பிரயாணம் செய்த இடம் புத்தர் பிறந்த இடமாகிய லும்பினித் தோட்டமா கும். அத் தோட்டத்தை அடைந்தவுடன் உபகுப் தர் அரசரை நோக்கி, 'அரசே! இவ்விடத்தில் தான் புத்தர் திரு அவதாரம் செய்தார்,' என்று தெரிவித்தார். அரசர் அத்தேச வாசிகளுக்குத் தான தருமங்கள் பல புரிந்த பிறகு, உபகுப்த ருடன் அவ்விடத்தை விட்டகன்று கபிலவஸ்து நகரத்துக்குச் சென்றூர். பின்னர், புத்தர் ஞானம் பெற்ற இடமாகிய பாடலிபுத்திரத்திற்கு அருகி லுள்ள புத்தகயை என்னும் க்ஷேத்திரத்திற்குப்

போந்து போதிவிருட்சத்தையும் அவர்கள் தரிசித்தனர். அடுத்தபடியாக அவ்விருவரும் சாரநாத புரியைத் தரிசித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுச் சாக்கிய முனிவர் இறைவன் திரு நீழலையெய்திய இடமாகிய குசிநகரா என்னும் இடத்திற்குச் சென்று அதையும் தரிசித்தனர்.

அசோக மகாராஜரும், உபகுப்தரும் அதோடு நில்லாது, புத்தரின் பாதபங்கயங்கள் பட்ட இடங்கள் பலவற்றிற்கும் சென்று அவைகளையும் தரிசித்துக் கொண்டு வந்தனர்.

அசோகர் பட்டத்துக்கு வந்து பதின்மூன்று ஆண்டுகள் கடந்த பிறகு மகாநதிக்கும், கோதாவரி நதிக்கும் இடையில வங்காளக் குடாக் கடலை அடுத்துள்ள கலிங்க நாட்டின்மீது படையெடுத்து அதனையும் தம் இராஜ்ஜியத்தோடு சேர்த்துக் கொள்ள எண்ணிப் பெருஞ்சேனை ஒன்றினைத் திரட்டி அந்த நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். அசோகரின் சேனை எண்ணிக்கையில் அதிகமாய் இருந்ததனால் அவர் கலிங்கதேசத்தை வென்று, அதனைத் தம் இராஜ்ஜியத்தோடு சேர்த்துக் கொண்டார். இந்தக் கலிங்க தேசத்தில்தான் இந்துக்களால் பெரிதும் கொண்டாடப்படும் பூரி அல்லது ஜகந்நாதம் என்னும் மஹாபுண்ணிய க்ஷேத்திரம் இருக்கின்றது.

கலிங்க தேசத்தினரும் மகாவீரர்களாவர். ஆகவே அவர்கள் தங்கள் நாட்டை இலகுவில் அசோகருக்கு விட்டுக் கொடுத்துவிடவில்லை. இரு

கட்சியாருக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது. இச்சண்டையில், இலட்சத்து ஐம்பதினுயிரம் பேர் கைதியாயினர் என்றும் இலட்சம்பேர் கொல்லப் பட்டனரென்றும், இவ்விரு எண்ணிக்கையைவிட எத்தனையோ பங்கு அதிகமான தொகையினைக் கொண்ட ஜனங்கள் நோய்களாலும், பஞ்சத்தினு லும் பிடிக்கப்பட் டிறந்துவிட்டன ரென்றும் அசோகர் நாட்டி வைத்திருக்கிற தம் கல்வெட்டு களில் குறிப்பிட்டு உள்ளார்.

கலிங்கநாட்டுப்போரில் அநேகம் ஆயிரக் கணக்கான மக்கள் வீணே மாண்டு போனதைக் கண் ணுற்ற அசோகர் மிகவும் மனம்வருந்தி,இனி, தாம் யுத்தத்திற்குச் செல்வதில்லை என்று சபதம் செய்து கொண்டார். அதற்கிணங்க அவர் கலிங்க தேசத்துச் சண்டைக்குப் பிறகு வேறு எப்போரும் நடத்தவில்லை எனத் தெரிய வருகின்றது.

அசோகர் கலிங்கப்போருக்குப் பின்னர் புத்த மதத்தை மேற்கொண்டு ஒழுக ஆரம்பித்தார். அவர் யுத்தத்தை வெறுத்து, உயிர்களுக்குக் கேடு புரிவதே இல்லை என்ற விரதத்தை மேற்கொண்டாராகலின் அவருக்கு இராஜரிஷி என்ற பெயர் ஏற்பட்டது. பௌத்த மதத்தில் உயிர்க்கொலை செய்தல் தகாது என்பதைக் குறித்து விசேஷமாகச் சொல்லப்பட்டு

உளதாதலால் கலிங்க நாட்டுப் போர் நிகழ்ந்த பின்பு அசோகருக்குஉயிர்களுக்குத்திங்குசெய்யாது காப்பாற்றுவதாகிய புத்த மதத்தில் ஆர்வமும்,பக்தியும் மேலிட்டு அதைத் தாம் கைக்கொண்டதோடு நில்லாது தமது இனத்தவரையும் பொது மக்களையும் கைக்கொள்ளுமாறு செய்தார்.

இரண்டாம் அத்தியாயம்.

2. அசோகரும், பௌத்த மதமும்

அசோகருக்கு முன்பே சுமார் மூந்நூறு வருடங்களாக இந்தியாவில் பௌத்த மதம் ஏற்பட்டுச் சிற்சில பாகங்களில் அஃது ஜனங்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது என்பதை நாம் மேற்கூறிய அத்தியாயங்களில் வரும் விஷயங்களால் அறியலானோம். இன்னும் அசோகர் தமது இளமைப் பருவத்திலும், தாம் பட்டத்துக்கு வந்த சில ஆண்டுகள் வரையிலும் குரூர சிந்தை கொண்டவராய் இருந்தனர் என்று நாம் பற்பல சந்தர்ப்பங்களினால் தெரிந்துகொண்டோம். அவர் புத்த மதத்தை மேற்கொண்ட பிறகு, அத்தகைய துஷ்டகாரியங்களில் பிரவேசியாது முனிவரைப் போன்று போதி விருட்சத்தின் அடியில் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனைகளிலேயே தமது காலத்தைக் கழித்துக் கொண்டு வரலானார்.

அசோகர் பௌத்த மதத்தை மேற்கொண்ட செயலை அவர் பிரஜைகள் விரும்பவில்லை. ஆனால் அவர் துஷ்ட குணங்களினின்றும் நீங்கியதைக் கண்டு அனைவரும் சந்தோஷம் எய்தியவராயினர். அவர் பௌத்த மதத்தை மேற்கொண்டு, சில சமயங்களில் இரண்டொரு தினங்கள் வரை அன்ன ஆகாரம் உட்கொள்ளாது, போதி விருட்சத்தின் அடியில் இருந்து வந்ததைக் கண்ணுற்ற இராணிகளுக்கு அவரிடம் வெறுப்பு உண்டாயிற்று. ஆகவே, அவருடைய இராணிகளில் ஒருத்தியா

கிய திஷ்யாரக்ஷிதை என்பாள் அம்மரத்தை வெட்டி விடும்படி கட்டளையிட்டாள். அந்த இராணியின் கட்டளைக் கிணங்க வேலையாட்கள் அம்மரத்தை வெட்டி விட்டார்கள். அதை யறிந்த அசோகர் மிகவும் வருந்தினர். அவர் சிறு வயதிற்கொண்டிருந்த குரூர சிந்தையை இப்போதும் கொண்டிருப்பின் இராணிக்கும், அவளுடைய வேலையாட்களுக்கும் என்ன கதி நேர்ந்திருக்கும் என்பதை நாம் யூகிக்கலாம். அசோகர் பௌத்த மதத்தை மேற்கொண்டு ஒழுகி வந்தபடியால் அம்மரம் வெட்டப்பட்டதற்கு அவர் மனம் வருந்தியதுடன் நின்று விட்டாரே யல்லாது, அம்மரத்தைச் சேதித்தவர்களுக்கு ஒருவிதத் தண்டனையும் விதிக்கவில்லை.

பௌத்த மதத்தை மேற்கொண்டது முதல் அசோகர் பௌத்த பிக்ஷுக்களையும், பிக்ஷுணிகளையும் கௌரவமாக நடத்தி வந்தார். அவர்களிடத்தில் அவருக்குச் சிறந்த மதிப்பும் அன்புமிகுந்த பக்தியும் ஏற்பட்டிருந்தன.

அசோகர் பௌத்த மதத்தை மேற்கொள்ளுவதற்குமுன், பௌத்த பிக்ஷுக்களிடத்தும் பிக்ஷுணிகளிடத்தும் வெறுப்புக் கொண்டிருந்தார் என்றே தெரிகின்றது. பிம்பிசாரனுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அவன் குமாரனுகிய அஜாதசத்துரு புத்தர் இறந்த பிறகு தன்னுடைய இராஜதானிப் பட்டினமாகிய இராஜகிரகத்தில் புத்தரின் ஞாபகார்த்தமாகக்கட்டி இருந்த சின்னங்களில் சிலவற்றை அசோகர் தாம் பௌத்தராவதற்கு முன்

இடித்து நாசஞ் செய்துவிட்டு வேறு சின்னங்கள் ஏற்படுத்தினர் என்றும் தெரிகின்றது.

அசோகர் பௌத்த மதத்தை மேற்கொண்ட பிறகு, தமது அரண்மனையில் இருந்த அறுபதினாயிரம் புரோகிதர்களையும் ஓட்டிவிட்டு, அவர்களுக்குப் பதிலாகப் பௌத்தபிக்ஷுக்களை நியமித்தார் என்றும் அறிகிறோம். பௌத்த பிக்ஷுக்களுக்கான சகலவித சௌகரியங்களையும் அசோகர் செய்து கொடுத்தார். இங்கனம், அசோகர் பௌத்தமதத்தைத் தழுவிப் பௌத்த பிக்ஷுக்களை ஆதரிக்கமுற்பட்டதனால், அரசாங்கத்தில் ஆதரவு பெற்று வந்த பிராமணப் புரோகிதர்களிற் சிலர் பௌத்த பிக்ஷுக்களைப்போல வேஷங் கொள்வாராயினர். அரசர் எவ்வழியிற் செல்லுகிறாரோ அவ்வழியே குடிகளும் செல்வார்களாகையால், அரசர் பௌத்த பிக்ஷுக்களிடத்தில் அன்பாய் இருந்ததைக் கண்ட அவர் குடிகளும் பொது ஜனங்களும் அவர்களிடத்தில் அன்பாய் இருந்துவந்தார்கள்.

கலிங்கநாட்டு யுத்தத்திற்குப் பிறகு அசோகர் பௌத்த மதத்தை மேற்கொண்டாரன்றோ? மேற்கொண்டாரெனினும் முதல் இரண்டரை வருஷங்கள் வரை தாம் மேற்கொண்ட பௌத்த மதத்தைப் பரவச் செய்ய அவர் அதிக முயற்சி எடுத்துக்கொண்டாரில்லை. பின்னர் அவர், அம்மதத்தின்பால் இடையறா அன்பு பூண்டு, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற் கேற்ப, தாம் மேற்கொண்ட பௌத்த மதத்தை மேற்

கொள்வதனுற்றுன் ஜனங்களுக்குச் சுகம் ஏற்படும் என்று அவர் மனப் பூர்த்தியாய் நம்பி அம்மதத்தை ஜனங்களிடையே பரப்ப வெண்ணிக் கால முழுவதையும் அதற்கான விஷயத்தில் செலுத்தத் தலைப்பட்டுப் பெருமுயற்சி எடுத்து வந்தார்.

இங்ஙனம் அவர் செய்ய முற்பட்டவுடன் வேட்டையாடுதலை அறவே விட்டொழித்தார். பௌத்தமத சம்பந்தமான புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு அடிக்கடி அவர் தீர்த்த யாத்திரைசெய்து வந்தார்; பௌத்த மத சம்பந்தமான நூல்களைப் படிக்கலானுர்; பௌத்த பிக்ஷுக்களிடத்தில் தமக்கு ஏற்பட்ட ஐயங்கள் பலவற்றையும் தீர்த்துக்கொள்ளத் தலைப்பட்டார். அவர் பௌத்தமத சம்பந்தமான காலட்சேபங்களில் தம் காலத்தைச் செலவழித்துப் பௌத்தர் கூறிய சத் விஷயங்களைப் பக்தி சிரத்தையுடன் கேட்டுக்கொண்டு வந்தார்.

புத்தரால் ஏற்படுத்தப்பட்ட தருமத்தைப் பரப்புவதே தமது முக்கிய கடமையெனக்கொண்டு அதற்கான வழிகளில் எல்லாம் அவர் தம் உடல் பொருள் ஆவியான மூன்றையும் அர்ப்பணஞ் செய்தார். அசோகர் அக்காலத்தில் ஒப்பற்ற சக்கரவர்த்தியாய் இருந்தபடியால் தமது அதிகாரங்களைத் துணையாகக் கொண்டு அவரால் பௌத்த மதத்தை ஜனங்களிடையே அதிக இலகுவாகப் பரப்பமுடிந்தது. அசோகர் பௌத்த மதத்தில் ஆர்வம்கொண்டு, அம்மதத்தை ஜனங்களிடையே பரப்ப முயற்சி எடுத்துக்கொண்டிரா

விடின் அம்மதம் இப்போது அடைந்துள்ள இவ்வளவு உன்னத பதவியை ஒருபோதும் அடைந்திருக்கமாட்டாது. புத்தர் காலத்திலும், அவருக்குப்பின் முந்நூறுவருடகாலம் வரையிலும் புத்தரின் உபதேசங்கள் பௌத்தர்களால் புண்ணிய பூமி என்று கொண்டாடப்படும் கங்கை, யமுனை பிரதேசங்களுக்கிடையில் மாத்திரமே அதிகமாகப் பரவி இருந்தது.

மதப்பிரசாரகர்களில் உலகத்திலேயே தலை சிறந்துவிளங்கும் செயிண்ட் பால், (Saint Paul) கான்ஸ்டன் டைன் என்னும் சக்கரவர்த்தி, Constantine the Emperor) காலிப் ஓமர் (Kalif Omar) ஆகிய இவர்களுக்குச் சமமாக அசோகரைக் கூறலாம்.

பௌத்தமத ஸ்தாபகரான கௌதம புத்தர் கடவுளைப் பற்றியேனும், கைலாசம், வைகுந்தம் முதலியவைகளைப் பற்றியேனும் ஒன்றும்உரைத்திலர். ஆயினும் அவர் ஜனங்கள் பலரும் கஷ்டம் நீங்கிச் சுகம் அடைவதற்கான மார்க்கங்களையே பிரதானமாக எடுத்துக் கூறியுள்ளார். இம்மார்க்கங்களைப் பின்பற்றி யொழுகினல் மானிடர்கள் பிறப்பு இறப்பு என்னும் பந்தங்களினின்றும் நீங்கிப் பேரின்பமாகிய நிர்வாண நிலையை யடைவார்கள் என்றும் மொழிந்துள்ளார். அசோகரும் மாந்தர்கட்கு நன்மை செய்வதையே பிரதானமாகக் கொண்டவராகையால் அவருக்குப் பௌத்த மதத்தினிடத்தே அளவுகடந்த ஆர்வம் ஏற்பட்டது என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இந்து மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் அதிக வேற்றுமை இல்லை. பௌத்த மதமும் இந்து மதத்தின் ஓர் பிரிவேயாகும். இந்து மதத்தில் ஜாதி வித்தியாசங்களைக் குறித்த விஷயங்கள் கடுமையாய் இருக்கின்றன. பௌத்த மதத்திலோ ஜாதி வித்தியாசம் கிடையாது. இந்து மதமும் உயிர்க்கொலை கூடாதென்றும், பெரியவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்றும் கூறுகிறது. ஆனால், பௌத்த மதத்தில் இவ்விரண்டு விஷயங்களும் அடிப்படையான கொள்கைகளாக மிளிர்கின்றன. இவ்வொன்றிரண்டு விஷயங்கள் தவிர இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் அதிகமான வேறுபாடுகள் கிடையா. ஆகவேதான் பௌத்தமதமானது நாளடைவில் தான்பிறந்த இடமாகிய இந்தியாவில் ஒரு தனி மதமாக ஓங்கமாட்டாமல் அது இந்து மதத்துடனேயே கலந்துவிட்டது.

பௌத்தமத ஸ்தாபகரமான கௌதம புத்தர் தம் உபதேசங்களின் எப்பாகத்திலும் கடவுள் இல்லை யென்று சொல்லவில்லை. அவருடைய சீடர்கள் அவரைக் கடவுளைப்பற்றியும், மேல் உலகத்தைப் பற்றியும் உரைக்குமாறு கேட்டபோது அவர் அவர்களை நோக்கி, 'உயிருக்கு இன்பம் உண்டாகக் கூடியவழியில் பாடுபடுங்கள்!' என்று கூறியிருக்கின்றாரே யன்றிக் கடவுள்இல்லை யென்றுவது, மேல்உலகம் உண்டு.அல்லது இல்லையென்றுவது அவர்எடுத்துக் கூறினாரில்லை. மனிதன் கடவுளின் சொரூபங்களாகிய மற்றைய மனிதர்களிடத்தும்,

மற்றுமுள்ள ஜீவஜந்துக்களிடத்தும் இடையரு அன்பு பூண்டொழுகிவரின் அவன் தானுகவே கடவுளை அறிவான் என்றும், கடவுளைக்குறித்துத் தர்க்கிப்பது உசிதமல்லவென்றும் புத்தர் எண்ணியிருந்தார். ஆகவே அவர் கடவுளைப் பற்றி ஒன்றுங் கூருது விட்டிருக்கின்ருர்.

அசோகர், புத்தரின் மார்க்கத்தைப் பின் பற்றித்தாம் பரப்பிய மார்க்கங்களைக் கல் வெட்டுக்களிலும், தூண்களிலும், ஸ்தம்பங்களிலும் மற்றும் இவை போன்ற சில சாசனங்களிலும் ஆங்காங்கே பல குறிப்புகளாகக் குறித்திருக்கின்ருர்.

மோட்ச மார்க்கம் என்பது உயிர்களிடத்தே இரக்கங் காட்டுவதும், ஏழைகளுக்குத் தானதருமங்கள் செய்வதும், எவ்விதமான மதஸ்தர்களிடத்தும் அன்பு பூண்டொழுகுவதும், மனோவாக்குக் காயங்கள் சுத்தமாயிருப்பதும், ஆகிய செயல்களேயாம் என அசோகர் வற்புறுத்தி மொழிந்துள்ளார்.

அசோகரின் உபதேசங்கள் பலவும் உயிர்களுக்கு இன்பம் உண்டாக்கக்கூடிய ஒரு கருத்தையே அடிப்படையாகக் கொண்டு உள்ளன. மற்றும் அவருடைய உபதேசங்கள் யாவும் ஒவ்வொரு மனிதனுலும் இலகுவாக ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கக்கூடியவைகளாய் இருக்கின்றன.

இந்துக்களின் கொள்கையின்படி அரசன் கடவுளுக்குச் சமமாகக் கருதப்படுகின்ருன். அரசன் தன் குடிகளைச் சொந்த மக்களைப்போலப் பாது

காத்தல் வேண்டும். அதன்படியே அசோகர் தம் பிரஜைகளைத் 'தம்மக்கள்' என்று கல் வெட்டுக்களில் எடுத்துக் கூறியுள்ளார். இதனால் அசோகர் தம் பிரஜைகளின் முன்னேற்றத்தில் எவ்வளவு சிரத்தை கொண்டிருந்தார் என்பது கரதலாமலகம் போல் நன்கு விளங்குகின்றது.

அசோகர், புத்தரின் கொள்கைகள் ஜனங்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படையா யிருந்ததலால் அவைகளை மாந்தர்களிடையே பரப்புமாறு ஏழைகளும், பணக்காரர்களும், பெரிய மனிதர்களும், சாதாரண மனிதர்களும் முயற்சி கொள்ளல்வேண்டும் என்று கூறியுள்ளார். அதற்கு உதாரணமாக அசோகர் இவ் விஷயத்தில் தாமே முனைந்து காரியங்களைச் செய்துவந்தார். ஆகவே குடிகள் அவரைப்பின்பற்றிப் புத்த மதத்தை அனுசரித்து நடக்கலானார்கள்.

அசோகரும் தமது குருவைப் போலவே, தாம் பரப்பிய மதத்தைக் குறித்துக் கூறுகையில் கடவுளைப் பற்றியாவது, மேல் உலகத்தைப் பற்றியாவது, இந்திரலோகத்தைக் குறித்தாவது ஒன்றுங் கூறவில்லை. ஆனால் அவர் மனிதன் தன்னுடைய முயற்சியினாற்றான் தன்னை உயர் பதவிக்குக் கொண்டுபோக முடியுமென்றும், மனிதன் தான் மேற்கொள்ளும் சன்மார்க்கமான காரியங்களினாற்றான் இவ்வுலகத்திலும், இதற்குப் பிறகும் சுகத்தைப்பெறக் கூடுமென்றும் சொல்லியிருக்கின்றார். ஆகவே, அசோகரும் புத்தரைப் போலவே கடவுள்

விஷயத்தில் அபிப்பிராயங் கொண்டிருந்தாரெனத் தெரிய வருகின்றது.

அசோகர், தாம் பௌத்த மதத்தை மேற்கொண்டது முதல், இறக்கும் பரியந்தம், அம்மதத்தைப் பரப்புவதற்குத் தம்மால் ஆன முயற்சிகள் பலவற்றையும் செய்து கொண்டு வந்தார். அசோகர் தாம் மதத்தைப் பரப்புவதற்கெனச் செய்த முயற்சிகளைத் தம்முடைய கல் வெட்டுக்களில் குறிப்பிட்டு உள்ளார் என முன்னரே படித்தீர்கள்.

ஒரு சிலர் அசோகர் பௌத்த மதத்தைமேற்கொண்ட சில ஆண்டுகள் கழித்து அரசாட்சியை நீத்துப் பௌத்த பிக்ஷுவாய்விட்டார் என்று கூறுகின்றனர். ஆனால் இக்கூற்று ஆதாரமற்றதாகவே தோன்றுகிறது. அசோகர் தம் கல் வெட்டுக்கள் பல வற்றிலும் தாம் அரசராகவே இருந்ததாகக் கூறியுள்ளார். இராஜபுதனத்திய கல் வெட்டுக்களிலும் அசோகர் இதைக் குறித்துக் கூறியுள்ளார்.

அசோகர் தமக்குப் பட்டாபிஷேகம் ஆன இருபத்தோராவது ஆண்டில் பௌத்தமத க்ஷேத்திரங்களைத் தரிசித்தார் என்று தெரிகிறது. அந்த யாத்திரையைக் குறித்த விஷயங்கள் நேபாள பிரதேசத்திலுள்ள ரும்மிண்டி, நிக்லிவா கல் வெட்டுக்களில் குறிக்கப்பட்டு உள்ளன. அக்கல் வெட்டுக்களில் இந்த யாத்திரையைக் குறிக்கையில், அசோகர் தாம் அரசராய் இருந்துகொண்டிருக்கையில், தாம் சிம்மாசனமேறிய இருபத்தோராவது வருடத்தில் இந்த யாத்திரையை மேற்

கொண்டதாகக்குறிப்பிட்டு இருக்கின்றார். ஆகவே, அசோகர் பௌத்தமதத்தை அனுசரித்த சில ஆண்டுகளுக்குள் அரசாட்சியைத் துறந்து விட்டார் என்னும் கூற்று ஆதாரமற்றதாகும்.

சிலர் அசோகர் அரசராய் இருந்து கொண்டே எங்ஙனம் பௌத்தமதப் பிரசாரத்தையும் மேற்கொள்ள முடிந்தது என்பதைக் குறித்து ஐயங்கொள்ளுகின்றனர். ஆகவே அதைக் குறித்துஞ் சற்று கவனித்தல் அவசியமாகும்.

அசோகரின் கல்வெட்டுக்களினாலும், பாஹியான், உவாங்சியாங், முதலானவர்கள் எழுதிவைத்துள்ள கிரந்தங்களினாலும், அவர் அரசராய் இருந்துகொண்டே பௌத்த மதப் பிரசாரத்தைச் செவ்வையாய்ச் செய்து கொண்டு வந்தார் என்பது தெரியவருகின்றது.

அசோகர் பௌத்த மதத்தை மேற்கொண்ட இரண்டரை வருடங்கழித்துப் பௌத்தமதப் பிரசாரத்தில் தம் உடல் பொருள் ஆவியாகிய மூன்றையும் ஒருங்கே தத்தம் செய்தார் என்றுகூறுகின்றார்கள். அதை குறித்துச் சற்றே கவனிப்போம். அசோகர் பௌத்தரான பிறகு அவர் பௌத்த பிக்ஷுக்க ளெல்லோருக்கும் தலைவரானார் என்று பலர் கூறுகின்றனர்.

அசோகர் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு வேண்டி அநேக பிரசாரகர்களை ஏற்படுத்தி, அவர்களை இந்தியாவின் பற்பல பாகங்கட்கும் அனுப்பினார். அவரால்அனுப்பப்பட்ட பிரசார

கர்கள் ஆங்காங்குச் சென்று புத்தரின் கொள்கைகளை ஜனங்களுக்கு எடுத்துப் போதித்தனர். இந்தியாவுக்கு மட்டுமல்லாது பர்மா, இலங்கை ஆகிய இந்த நாடுகளுக்கும் அசோகர் பௌத்த மதப் பிரசாரகர்களை அனுப்பி வைத்தார். அவர்கள் அவ்விரண்டு இடங்களுக்கும் சென்று பௌத்த மதக் கொள்கைகளை ஜனங்களிடையே உபதேசித்துக்கொண்டு வந்தார்கள்.

மத்திய ஆசியா, ஐரோப்பாவின் கிழக்குப் பாகம், ஆப்பிரிக்காவின் வடக்குப்பாகம் ஆகிய இப்பிரதேசங்களுக்கும் அசோகர் பௌத்தமதப் பிரசாரகர்களை அனுப்பி வைத்தார். இவைகளைப்பற்றியும் அசோகர் தமது கல்வெட்டுகளில் குறிப்பிட்டு இருக்கின்றார். நாகரிகம் அடையாத இமயமலைப் பிரதேசங்களிலும், இந்தியாவின் வடமேற்குப் பிரதேசங்களிலும் வசித்து வந்த காட்டு மிராண்டிகளிடையே புத்தரின் அஹிம்சா தருமக் கொள்கைகளைப் பரப்ப அசோகர் பற்பல பிரசாரகர்களை அனுப்பினார். தக்ஷணம் மத்திய இந்தியா ஆகிய இப்பிரதேசங்களுக்கும் அவர் பௌத்தமதப் பிரசாரகர்களை யனுப்பினார். சுருங்கக் கூறுமிடத்து இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கும் அவர் பிரசாரகர்களை அனுப்பினார் என்றே உரைத்தல் பொருந்தும்.

எந்த மதப்பிரசாரகரும் அசோகரைப்போல அத்துணைக் கஷ்டமெடுத்துக்கொண்டு தாம் மேற்கொண்ட மதத்தை ஜனங்களிடையே பரப்ப

முயற்சித்த தாகத் தெரியவில்லை. இங்ஙனம் அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக உலகத்தின் நாற்பக்கங்களிலும் பௌத்த மதஸ்தர்கள் மேன்மேலும் பெருகலாயினர். அசோகரின் முயற்சியினாலும், அவரால் அனுப்பப்பட்ட மதப்பிரசாரகர்களின் முயற்சியினாலும் பௌத்த மதம் இந்தியா, பர்மா, இலங்கை, சையாம், கம்போடியா, கிழக்கிந்தியத் தீவுகள், சீனா, கொரியா, ஜப்பான், மங்கோலியா, திபேத் முதலிய மற்றும் பல நாடுகளிலும் பரவிற்று.

பௌத்தமத சம்பந்தமான விஷயங்களைக் கவனிப்பதற்கென விசேஷ அதிகாரிகள் அசோகரால் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்குத் தரும மகாமந்திரர்கள் என்று பெயர். இவர்கள் தாம் செய்யவேண்டிய வேலைகளுடன், பௌத்தமதப் பிரசார சம்பந்தமான விஷயங்களையும் கவனித்தல் வேண்டும். இந்த உத்தியோகஸ்தர்கள் தருமயுக்தர்கள் என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

அசோகர், பௌத்த மதத்திற்குக் கேடு சூழ்கிறவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகள் இவையென சாரநாத், அலகாபாத், கௌசாம்பி, ஜான்சி ஆகிய இவ்விடங்களில் செதுக்கப்பட்டிருக்கும் கல் வெட்டுக்களில் விரிவாகக் குறித்திருக்கிறார்.

நாளடைவில் பௌத்த மதத்தை மேற்கொண்டவர்களுக்கு இடையில் அபிப்பிராய பேதங்களும், சண்டை சச்சரவுகளும், மனஸ்தா

பங்களும் ஏற்படவே அசோகர் அவைகளை நீக்கிப் பௌத்தமதத்தில் ஈடுபட்டவர்களை ஒன்று சேர்க்க மகாசபையொன்றைக் கூட்டினார் என்றும் தெரிகிறது.

அசோகர் என்னதான் முயற்சி எடுத்துக் கொண்டபோதிலும் அடியோடு உயிர்க் கொலையை நிறுத்த அவரால் இயலவில்லை. சில மிருகங்களைக் குறிப்பிட்ட காரணங்களுக்காகக் கொல்லுவது குற்றமாகா தென்று அவர் தெரிவித்திருந்தார். ஆடுமாடுகளுக்கு விதை அடிக்கும் வழக்கத்தை அசோகரால் நிறுத்த முடியவில்லை. ஆனால் அவர் புண்ணிய தினங்களில் விதை அடிப்பதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று ஆக்ஞாபித்தார். குதிரைகளுக்குக் கடிவாளமும், எருதுகளுக்கு மூக்காங்கயிறும் போடக் கூடாதென்று அவர் தடுத்திருந்தார். வருஷத்தில் ஐம்பத்தாறு புண்ணிய தினங்களில் மீன் பிடிக்கக் கூடாதென்றும், அத்தினங்களில் காடுகளில் மிருகங்களை வேட்டையாடிக் கொல்லுதல் கூடாதென்றும் அவர் தடுத்திருந்தார். சேவல்களைக் கொல்லக் கூடாதென்று அவர் கண்டிப்பாய் ஆக்கினை பிறப்பித்திருந்தார். அசோகரால் உயிர்க்கொலையோடு கூடிய யாகங்களை அடியோடு தடுக்க முடியவில்லை.

அசோகர் அடிக்கடி தம்முடைய சிலாசாசனங்களில் உயிர்க்கொலை கூடாதென்றும், பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்றும் செதுக்கி இருக்கின்றார். ஆனால் உயிர்களில் உயர்வு மிக்கவர்களான மானிடப்பிறவி யெடுத்

தாருக்குக் கேடு சூழ்வதைக் குறித்து அசோகர் அவ்வளவாகக் கவனித்தன ரல்லர். அசோகர் காலத்தில் குற்றவாளிகளைக் கொலை செய்யும் வழக்கம் இருந்து வந்தது. கொலைத் தண்டனை விதிக்கப் பெற்றவர்கள் இறந்துபட மூன்று தினங்கள் இருக்கும் போது நிம்மதியாய் இருக்க இடம் கொடுக்கப் பெற்றனர். இஃது ஒன்றே அசோகர் இவ்விஷயத்தைக் குறித்துச் செய்த நற்காரிய மாகும் என்றுதான் தெரிகிறது.

அசோகர், பௌத்த மதத்தைத் தழுவாத மாந்தர்கட்கு ஒருவிதத் தண்டனையையும் அளித்தா ரல்லர். இக்காரணம் பற்றியே, பௌத்தமதம் இந்தியாவில் மாத்திரமல்லாது கடலுக்கு அப்பாலுள்ள பிற நாடுகளிலும் பரவிச் செழித்திருக்க ஏதுக்கள் பல ஏற்பட்டன. எல்லா மதங்களும் ஏதோ ஒரு நல்ல அடிப்படையான கொள்கையைத் தம்மிடத்தில் கொண்டு இருக்கின்றன என்ற உண்மையினை அசோகர் உணர்ந்து இருந்தார். ஆதலினாற்றான் அவர் சில மதப் பிரசாரகர்களைப் போலத் தாம் மேற்கொண்ட மதத்தைப் பரப்ப அட்டூழியமான காரியங்களைச் செய்யவில்லை. இத்தகைய அவருடைய செயல் மிகவும் பாராட்டத் தக்கதேயாகும். அவர் தமது கல் வெட்டுக்களிலும், சில சாசனங்களிலும் பிராமணர்களுக்குப் பிச்சை இடவேண்டுமென்றே கூறுகின்றார். தம் தேசத்தில் இருந்த ஜைனர்களும், அஜிவிகர்களும் தமது பிரஜைகள் ஆகையால் அவர்களின் மதக் கொள்கைகளைக் குறித்து ஒன்றும் இழிவாகச் சொல்லக் கூடா

தென்று கல் வெட்டுக்களில் எங்கெங்கும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கின்றார்.

அசோகர் பௌத்த மடாலயங்களுக்கும், கோயில்களுக்கும், அதிக பணஉதவி செய்துள்ளார். அதோடு அவர் அஜிவிகர்களுக்கும் அதிக நன்மைகளைப் புரிந்துள்ளார். அஜிவிகர்கள் என்போர் நிருவாணமாய் இருக்கும் ஒருவகைச் சந்நியாசிகள் ஆவர். இவர்கள் குகைகளில் உறைவது வழக்கம். அசோகர் ஜைனர்களுக்கும், பிராமணர்களுக்கும் பணஉதவி செய்திருக்கின்றார். அசோகர் காஷ்மீர தேசத்தில் பிராமணர்களுக்குப் பல கோயில்களைக் கட்டியோ, அல்லது புதிப்பித்தோ உதவி புரிந்ததாகத் தெரியவருகிறது.

அசோகர், கல் வெட்டுக்களில் கர்மானுசாரத்திற்குத் தக்கபடி மனிதன் நன்மைகளையும் தீமைகளையும் அடைகின்றான் என்ற கொள்கையை வெளிப்படையாகக் கூறியிருக்கின்றாரில்லை. புத்தர் பெரிதும் விரும்பிய நிருவாண நிலையைக் குறித்தும் அசோகர் தமது கல் வெட்டுக்களில் வெளிப்படையாக ஒன்றும் உரைக்கவில்லை. ஆனால் அசோகரின் கல் வெட்டுக்களை ஆழ்ந்து நோக்கின் அவர் மறு பிறப்பு உண்டென்பதை உணர்ந்திருந்தார் என்றே தெரிகிறது. அசோகர் தமது கல் வெட்டு ஒன்றில் தாம் கஷ்டப்படுவதெல்லாம் உயிருள்ளவை இவ்வுலகிலும் மேலுலகிலும் கஷ்டமில்லாது சந்தோஷத்தை அடையவேண்டுமென்பதற்காகவே ஆகுமெனக் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு கல் வெட்

டில் அவர் தமது மதக்கொள்கைகளை மேற்கொள்வோர் பெரும் புண்ணியத்தைப்பெற்று மேலுலகில் சௌக்கியமாய் இருப்பர் என்று தெரிவிக்கின்றார். உண்மையிலேயே ஆதரவு அற்றவர்களுக்கு ஆதரவு அளிக்கும்செய்கை புண்ணியத்தை அடைவதற்கு வழியாகுமென்று அவர்கூறியுள்ளார். ஜனங்கள் இவ்வுலகில் மாத்திரமல்லாது மேல்உலகிலும் சௌக்கியமாய் இருக்கப் பாடுபட வேண்டும்என்றும், அங்ஙனம் பாடுபடுவதுதான் சிறந்த மார்க்கமென்றும் அவர் ஒருவாறு எடுத்துக் கூறியுள்ளார்.

அசோகர் கலிங்க தேசத்தை வென்றதற்கு அறிகுறியாகச் சில கல்வெட்டுக்களை அப்பிரதேசத்தில் நாட்டியுள்ளார். அவைகளில் அவர்,'யான் கூறுகிற விதம் காரியங்களைச் செய்துகொண்டு வருவோர் பிறப்பிறப்பற்ற ஆனந்த நிலையான மோட்சத்தை அடைவர்,' எனத் தெரிவிக்கின்றார்.

அசோகர் பௌத்த மதக் கொள்கைகளைப் பரப்புவதுடன் நின்றுவிடாது ஜனங்களின் நன்மையைக் கருதியும், பிரயாணிகளின் நன்மையைக் குறித்தும் அநேக காரியங்களைச் செய்திருக்கின்றார். அவையாவன:—

நிழல் கொடுக்கக்கூடியமரங்களையும், பழங்கள் தரக்கூடிய மரங்களையும் அவர் சாலைகளின்இரண்டு பக்கங்களிலும் வைத்துப் பயிராக்குமாறு செய்தார். அவர் ஜனங்கள் தங்குவதற்குச் சத்திரங்களை ஆங்காங்கே கட்டி வைத்தார். பாதைகளை அடுத்தாற்போலக் கிணறுகளும் துறவுகளும் வெட்டுமாறு

செய்தார். மிருகங்கள் தண்ணீர் அருந்துவதற்கென ஆங்காங்கு நீர்த்தொட்டிகளைக் கட்டி வைத்தார். நோயாளிகளுக்கென அநேகம் இலவச வைத்திய சாலைகளை ஏற்படுத்தினார். அதோடு மருந்துவகைக்கான பச்சிலை மூலிகையும் பயிராக்கினார். மிருகங்களுக்காகவும் அவர் அநேகவைத்திய சாலைகளைக் கட்டுவித்தார்.

ஒருசிலர் வைத்தியசாலைகள் பண்டைக்காலத்தில் இருந்தது கிடையாதெனச் சொல்லும் வழக்கத்தை மேற்கொண்டுளர். இச்சாரார் பண்டைக்காலத்தைப்பற்றி எவ்வளவு குறைவாகப்பேச இயலுமோ அவ்வளவு குறைவாகப் பேசுகின்றனர். இத்தகையோர் அசோகரின் சரித்திரத்தையும்,மெகஸ்தனிஸ் சந்திரகுப்த மௌரியரைப் பற்றி எழுதிவைத்துள்ள விஷயங்களையும், பா-ஹி-ஹான், உவாங்சாங் முதலிய சீனயாத்திரிகர்கள் இந்தியாவைப் பற்றி எழுதிவைத்திருக்கும் வரலாறுகளையும் படித்துப் பார்ப்பார்களானால் அவர்களுக்குப் பண்டைக் காலத்தின் பெருமை நாகரிகம் முன்னேற்றம் முதலியன இனிது விளங்கா நிற்கும்.

மூன்றாம் அத்தியாயம்

அசோகரின் ஆட்சி முறை

அசோகரின் ஆட்சி முறையைக் குறித்து அறிந்து கொள்வதற்கு ஆதாரமாய் உள்ளவை அவரால் ஏற்படுத்தப்பட்ட பற்பல சிலாசாசனங்களேயாகும். அவைகளுடன் பா-ஹி-ஹான்,உவாங் சாங் போன்ற சீன யாத்திரிகர்கள் எழுதிவைத்துள்ள கிரந்தங்களும் அசோகரைப் பற்றிப்பல விஷயங்களை அறிய உதவுகின்றன.

வடமேற்கில் அசோகரின் இராஜ்ஜியம் இந்துகுஷ்மலை வரையில் வியாபித்திருந்தது. அசோகரின் இராஜ்ஜியத்திற்கு வட எல்லையாய் இருந்தது இமயமலையாகும். கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கடல்கள் அசோகருடைய இராஜ்ஜியத்துக்கு எல்லைகளாம். தெற்கில் அசோகரின் இராஜ்ஜியம் வடபெண்ணை யாற்றங்கரை வரையில் வியாபித்திருந்தது. அவரது ஆட்சி ஆப்கானிஸ்தானம், பலுச்சிஸ்தானம், காந்தாரம் முதலிய மாகாணங்களிலும் வியாபித்து இருந்தது என்பதற்கு அறிகுறியாக அப்பிரதேசங்களில் அசோகர் ஏற்படுத்திய கட்டடங்களும், ஸ்தம்பங்களும் இன்றைக்கும் பாழடைந்த நிலையில் இருந்து வருகின்றன. காஷ்மீரதேசமும் அசோகருடைய இராஜ்ஜியத்தில் அடங்கிஇருந்தது. அசோகர் ஐந்நூறு சந்நியாசி மடங்களைப் பௌத்தபிக்ஷுக்களுக்கெனக் காஷ்மீரத்தில் கட்டினார் என்று கதைகள் கூறுகின்றன. நேபாளஇராஜ்ஜியமும் அசோகரின்

இராஜ்ஜியத்தில் சேர்ந்திருந்தது. இதற்குச் சான்றாக இப்போதும் நேபாள தேசத்தில் அசோகர் நாட்டிய இரண்டு கல் தூண்களைக் காணலாம். அசோகர் கட்டிய கோயில் ஒன்று இன்றைக்கும் நேபாள இராஜ்ஜியத்தில் இருந்து வருகின்றது. அவர் கட்டிய ஸ்தூபிகளும் அங்கு இருந்து வருகின்றன. நேபாள தேசத்திலுள்ள பதன் என்னுமிடத்திலும் அசோகர் கட்டுவித்த கட்டடங்களில் சிலவற்றை இன்றைக்கும் காணலாம்.

ஆஸாம், பர்மா, தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழ் நாடுகள் ஆகிய இவைகள் அசோகரின் இராஜ்ஜியத்தில் சேர்ந்திருக்கவில்லை.

அசோகரின் இராஜ்ஜியத்தின் தலை நகராகிய பாடலிபுரம் யமுனை நதிக் கரையின்மீது ஸ்தாபிக்கப்பட்டு இருந்தது. அந்நகரம் இரண்டு ஆறுகளுக்கு இடையிலிருந்தபடியால் அதைப் பகைவர் இலகுவாகக் கைக்கொள்ள முடியாதவராயினர். அந்நகருக்கு அறுபத்து நான்கு வாயில்கள் இருந்தன. அவ்வாயில்களிற் சுமார் அறுநூறு இடங்களில் கோபுரங்கள் கட்டப்பட்டிருந்தன. அந்நகரைச் சுற்றிலும் ஆழ்ந்த அகழி ஒன்று ஓடிக்கொண்டு இருந்தது. அந்நகரம் ஒன்பது மைல் நீளமும், ஒன்றரை மைல் அகலமும் உடையதாயிருந்தது என்று தெரிகிறது.

அரசரது அரண்மனை அமராவதியோ என்று ஐயுறும்படி அத்துணை அழகாகக் கட்டப்பட்டிருந்தது என்றே கூறவேண்டும்.

பாடலிபுரத்தின் நிர்வாக சபை முப்பதுபேர் கொண்ட ஒரு கூட்டத்தினரால் கவனிக்கப்பட்டு வந்தது. இக்கூட்டத்தினர் ஐந்து ஐந்து பேர் கொண்ட ஆறு சபையினராய் இருந்து ஒவ்வொரு சபையினரும் ஒவ்வொரு விதமான காரியத்தைக் கவனித்து வந்தனர். முதல் சபையினர் தொழில் சம்பந்தமான வேலைகளைக் கவனித்து வந்தனர். இரண்டாம் பிரிவினர் அந்நிய நாட்டார் சம்பந்த மான வேலைகளைப் பார்த்து வந்தனர். மூன்றும் பிரிவினர் மரண ஜனன விவகாரங்களையும், நான் காம் பிரிவினர், வர்த்தக சம்பந்தமான காரியங்களை யும், ஐந்தாம் பிரிவினர் நாட்டுக் கைத்தொழில் களைப் பற்றிய விஷயங்களையும், ஆறும்பிரிவினர் விற்பனைசம்பந்தமானதும், வரிகள் சம்பந்தமான தும், தண்டல் சம்பந்தமானதுமாகிய விஷயத் தையும் கவனித்து வந்தனர்.

இராஜ்ஜியத்தைச் சேர்ந்த மற்ற பட்டணங் களிலும் கிராமங்களிலும் இதே விதமாகக் காரி யங்கள் நடத்தப்பட்டுவந்தன.

அசோகர் காலத்தில் வியாபாரம் மிகச் செழிப் புற்று விளங்கியது. வியாபாரப் போக்குவரத்து ஆறுகளின் மூலமாயும், வாய்க்கால்களின் மூலமா யும் சாலைகளின் மூலமாயும் நடைபெற்று வந்தது. பாடலிபுரத்திலிருந்து சிந்துநதிக்கரை வரையி லும் அசோகர் ஒரு பெரிய அழகிய சாலையைப் போடுவித்தார். இச்சாலை வியாபாரத்துக்கு அதிக அநுகூலத்தைக் கொடுத்து வந்தது. அசோகர்

அச் சாலைகளில் மைல் கற்களை நாட்டி இருந்தார். இம் மைல் கற்களுக்குப் பக்கத்தில் அசோகர் பிரயாணிகளின் சௌகரியத்திற்கெனக் கிணறுகள் வெட்டி இருந்தார்; இன்னும் பழவகைச் செடிகளையும் பயிரிட்டிருந்தார். சாலைகளின் பற்பல இடங்களில் பிரயாணிகள் தங்குவதற்கெனச் சத்திரங்கள் பலவற்றைக் கட்டுவித்தார்.

அசோகர் இராஜ்ஜியகாரியங்களைக் கவனிப்பதற்கென அநேக இலாக்காக்களை ஏற்படுத்தியிருந்தார். நீர்ப்பாசன இலாகாவும் அவர் காலத்தில் இருந்து வந்தது. இவ்விலாகா அதி அற்புதமாகக் காரியங்களை இயற்றிக்கொண்டு வந்தது. ஆற்றுக்கு நூற்றுக்கணக்கான மைல் தூரத்தில் இருந்த குடியானவர்களுக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டது. நீர்ப்பாசன வசதிகளுக்காகக் குடிகள் தண்ணீர் வரி கொடுக்கவேண்டி யிருந்தது. அசோகர் குடியானவர்களின் சௌகரியத்திற்கென அநேக வாய்க்கால்களையும், கிணறுகளையும், துறவுகளையும் உண்டுபண்ணி இருந்தார். அரசர் குடிகளிடமிருந்து நாலில் ஒரு பங்கேனும் ஆறில் ஒரு பங்கேனும் கடமை வாங்கிவந்தார். அசோகர் காலத்திலும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இலஞ்சம் வாங்கும் துர்ப்பழக்கம் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. இப்பழக்கத்தை ஒழிப்பதற்கு அசோகர் அரும்பாடுபட்டார். அசோகர் தமது சாசனங்களில் இதைக் குறித்தும் செதுக்கி வைத்துள்ளார் என்று தெரிகிறது.

அசோகர், தாமாகவே எல்லாக் காரியங்களையும் கவனிக்க விழைந்தும் அவரால் அவ்விதம் நடக்க இயல வில்லை. அசோகர் தமது கல்வெட்டுக்களில் குடிகளின் நன்மைகளை நேராகக் கவனிக்கப் பாடுபடுவதே அரசனின் முக்கிய கடமை என்று உரைத்துள்ளார். குடிகள் தமது குறைகளை எல்லா விடங்களிலும் எக்காலத்தும் தம்மிடம் முறையிட்டுக் கொள்ளலாமென்றும் அவர் அறிக்கையிட்டிருந்தார்.

இந்திய நாட்டு மன்னர்கள் ஒற்றர்கள் மூலமாக அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டு அவைகளுக்குப் பரிகாரம் தேடி இருக்கிறார்கள். அதைப் போன்றே அசோகரும் அநேக ஒற்றர்களை நியமித்துத் தம் நாட்டில் நடைபெறற விஷயங்கள் யாவற்றையும் அறிந்து கொண்டார்.

தமது பாட்டனாராகிய சந்திர குப்தரைப் போலவே அசோகரும் பெரியதொரு படையினை வைத்திருந்தார் எனத் தெரியவருகின்றது. இந்திய அரசர்கள், இரத கஜ, துரக, பதாதிகள் என்னும் நால் வகைச் சேனைகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப்போலவே அசோகரும் அந் நால்வகைச் சேனைகளை வைத்திருந்தார். படையைச் சேர்ந்தவர்களுக்கு உயர்ந்த சம்பளம் அளித்து வந்தார். அசோகர் கடற்படையையும் வைத்திருந்தார். சந்திர குப்த அரசனுக்குப் பல வகையிலும் உதவிபுரிந்த சாணக்கியர் தம்முடைய நூலில் கப்பற்படை இலாகாவின் அதிகாரியாயுள்

ஸவர் கடலில் செல்லும் கப்பல்களைப் பற்றிய விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்று கூறி யுள்ளார். ஆகவே மௌரிய அரசர்கள் கடற் படை விஷயத்தையும் கவனித்துக் கொண்டிருந் தார்கள் என்று தெரிகிறது. அசோகர் தமது சேனு பலத்தைக் குறித்துத் தம்முடைய கல் வெட்டுக்களில் என்றுங் கூருது விடுத்தார்.

சேனைகளைக் குறித்த விஷயங்களைக் கவனிப் பதற்கெனத் தனி இலாக ஒன்று ஏற்பட்டிருந்தது. அவ்விலாகாவில் முப்பது உத்தியோகஸ்தர் இருந்து வந்தனர். அவர்கள் ஆறு பிரிவினர் களாகப் பிரிக்கப் பட்டு இருந்தார்கள்.

முதற் பிரிவினர் கடற்படை கப்பற்படை சம் பந்தமான விஷயங்களைக் கடற்படை இலாக அதி காரியுடன் சேர்ந்து கவனித்து வந்தனர். இரண் டாம் பிரிவினர் படைகளுக்கு வேண்டிய ஆயுதங் களைத் தயாரித்தல், படையினருக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேகரித்தல், இன்னும் இவை சம்பந்தமான வேலைகளைக் கவனித்தல் முதலிய காரியங்களைச் செய்து வந்தனர். மூன் ரும் பிரிவினர் காலாட்படை சம்பந்தமான வேலை களையும், நான்காம் பிரிவினர் குதிரைப் படை சம் பந்தமான வேலைகளையும், ஐந்தாம் பிரிவினர் இரத சாரத்திய சம்பந்தமான வேலைகளையும், ஆரும்பிரிவினர் யானைப்படை சம்பந்தமான வேலைகளையும் கவனித்து வந்தனர். பண்டைக் காலத்தில் எந்த அரசனிடத்து யானைகள் அதிக

மாய் இருந்தனவோ அந்த அரசனுக்கே அதிக மதிப்பு ஏற்பட்டிருந்தது. எனவே அசோகரின் யானைப்படையில் அதிக யானைகள் இருந்தமை ஓர் ஆச்சரியமன்று.

பண்டைக் காலத்தில் இந்திய மன்னர்கள் பேச்சுக்கு மறுவார்த்தை கிடையாதென்றே தோன்றுகின்றது. அதைப்போலவே அசோக ருக்குப் பௌத்த மத தருமங்களை நாடெங்கும் பரப்பச் சந்தர்ப்பம் வாய்த்தது. மகாமந்தரர்கள், யுக்தர்கள் என்னும் பெயரினைக் கொண்ட அதி காரிகள் மூலமாய் அரசாங்கக் காரியங்கள் நடை பெற்று வந்தன. எல்லைப் புறங்களிலும் காட்டுப் பிராந்தியங்களை அடுத்த ஊர்களிலும் இருந்த குடிகளை அப் பிரதேசங்களைச்சேர்ந்த அதிகாரி களே அரசரின் உத்தரவுப்படி ஆண்டுவந்தார்கள். இராஜ்ஜியத்தின் அநேக பாகங்களை அரசரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து அநேக சிற்றரசர்கள் ஆண்டு வந்தார்கள்.

முக்கிய மாகாணங்களை அரச குடும்பத்தைச் சேர்ந்த அரச குமாரர்களே ஆண்டுவந்தார்கள். அசோகர் அரசராவதற்கு முன் தக்ஷசீலம், உஜ்ஜ யினி முதலிய மாகாணங்களின் பிரதிநிதியாய் இருந்திருக்கிறார் என்பது இங்குக் கவனிக்கத்தக் கது. அசோகரது கல் வெட்டுக்களினால் தக்ஷ சீலம், உஜ்ஜயினி, தோசாலி, சுவர்ணகிரி ஆகிய இம்மாகாணங்களை இராஜப் பிரதிநிதிகள் ஆண்டு வந்தார்கள் என்று தெரிகின்றது.

இராஜ்ஜியத்தின் மத்தியபாகங்களை அரசரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஆண்டு வந்தார்கள். இராஜிகாவ்ஸ என்ற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தற்போது கவர்னர் என வழங்கப்படும் அதிகாரிகளுக்குச் சமமானவராவார்கள். அவர்களின் கீழே பிரதேசிகர்கள் என்ற ஜில்லா உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். இவர்களுக்குக் கீழ் யுக்தர்களும், உபயுக்தர்களும் வேலைபார்த்து வந்தார்கள். அரசருக்கும், பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் உதவியாக அநேகம் காரியதரிசிகள் நியமிக்கப்பட் டிருந்தார்கள். எழுத்து வேலைக்குக் குமாஸ்தாக்களும், சில்லரை வேலைகளுக்கு ஜவான்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இராஜ்ஜிய நிருவாக விஷயம் மிகவும் மெச்சத்தக்கவிதமாய் நடைபெற்று வந்தது என்பது இதனால் தெளிவாகின்றது.

நிலவருமான வரி மூலமாகத்தான் அரசாங்கத்துக்கு அதிக வருமானம் கிடைத்து வந்தது. பயிர் நிலங்கள் யாவும் அரசருடையதாகவே கருதப்பட்டு வந்தன.

மௌரிய அரசர்கள் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் அதிக கடுமையாயிருந்து வந்தார்கள். சில சந்தர்ப்பங்களில் வரி கொடாதவர் கொலைத் தண்டனைக்கும் உட்படுத்தப்பட் டிருக்கின்றனர். அரசர் வேட்டையாடச் செல்லும் ஊர்வலத்தின் மத்தியில் பிரவேசித்த ஒவ்வொருவனும் கொலைத் தண்டனைக்கு உள்ளாக வேண்டியிருந்தது. தொழி

லாளிகளின் கைகளையோ அன்றிக் கால்களையோ சேதிப்பவருக்கும் கொலைத் தண்டனை விதிக்கப் பட்டுவந்தது. பொய்ச் சத்தியம் செய்கிறவர்களும், பொய் யுரைப்பவர்களும் அங்கசேதம் செய்யப் பட்டு வந்தனர். சில குற்றவாளிகளின் தலையை மொட்டை யடித்து விடும் வழக்கம் இருந்தது. அசோகரும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் விஷயத்தில் கடுமையாகவே நடந்துகொண்டார் என்று தெரியவருகிறது.

மௌரியர்களின் இராஜ்ஜியம் இந்தியாவில் ஏறக்குறைய தொண்ணூறு வருஷத்திற்கு மேல் நிலைத்திருந்தது. மௌரிய இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தவர் சந்திரகுப்தர் ஆவர். அவர் தம் காலத்தில் வட இந்தியாவில் இருந்த அநேகம் சிறு சிறு இராஜ்ஜியங்கள் யாவற்றையும் வென்று தமது இராஜ்ஜியத்துடன் சேர்த்துக்கொண்டார். அவருடைய இராஜ்ஜியம் நருமதை நதிக்கரை வரையில் வியாபித் திருந்தது. அவர் தமது இராஜ்ஜியத்தை இருபத்து நான்கு வருஷங்கள் ஆண்டுவந்தார். அவருக்குப் பிறகு அவர் குமாரரான பிந்துசாரர் பட்டத்துக்கு வந்தார். அவர் இருபத்தெட்டு வருஷகாலம் அரசாட்சி புரிந்து வந்தார். அவர் புதிய இராஜ்ஜியங்களைத் தமது இராஜ்ஜியத்துடன் சேர்த்தார் என்ற விஷயமாக எதும் தெரியவில்லை. எனினும் அவர் தம் தகப்பனால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்ஜியத்தைப் போக்கடித்துக்கொள்ளாது அப்படியே அதைத் தம் குமாரர் அசோகருக்குக் கொடுத்தார்.

அசோகர் தமது பெருமுயற்சியால் பெண்ணை யாற்றங்கரை வரைக்கும் இராஜ்ஜியத்தை விஸ் தரித்துக் கொண்டார். மௌரிய அரசர்கள் ஆண்டு வந்த காலத்தில் இந்தியாவில் உள்நாட்டு விவகாரங்களும், இராணுவ விவகாரங்களும், மத சம்பந்தமான விவகாரங்களும், அரசாங்க விவ காரங்களும் மெச்சத் தக்க நிலையில் கவனிக்கப் பட்டு வந்தன வென்பது சந்தோஷிக்கத் தக்க தாகும். பாடலிபுரத்தினின்றும் அனுப்பப்பட்ட அரசாங்கக் கட்டளையின்படி இராஜ்ஜியத்தின் பற் பல பாகங்களிலும் காரியங்கள் நடைபெற்று வந் தன வென்பதும் மெச்சத்தக்க விஷயமாகும்.

மௌரிய வம்சத்து முதல் அரசரான சந்திர குப்தரையும், மூன்றும் அரசரான அசோகரையும் இந்தியாவில் அரசாண்ட அரசர்களில் மிகவும் சிலாக்கியமானவர்கள் என்றே கூறுதல் வேண்டும். இவர்கள் சரித்திரத்திலேயே எல்லா அரசர்களைப் பார்க்கிலும் புகழப்பட்ட அரசர்கள் ஆவார்கள்.

நான்காம் அத்தியாயம்

அசோகரின் நற்போதனைகள்.

அசோகர் தமது கொள்கைகளையும், அபிப்பிராயங்களையும், தாம் இயற்றிய செயல்களையும் கற்பாறைகளிலும், தூண்களிலும், மலைகளிலும், குகைகளிலும் செதுக்கி வைத்துள்ளார். அசோகர் தமது ஒவ்வொரு ஏற்பாட்டையும் கற்களிலும், தூண்களிலும் செதுக்கி வைத்திருக்கிறார். ஆகவே, அவைகளைக் குறித்தும் சிறிது கவனிக்க வேண்டி யிருக்கின்றது. அசோகரால் ஏற்படுத்தப்பட்ட கட்டளைகள் முப்பத்தைந்தாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

அசோகர் தமது முதற் கட்டளையின் சட்டத்தில் தாம் பௌத்த மதத்தை மேற்கொண்டதைப் பற்றிக் குறித்துள்ளார். இக் கட்டளைகள் வட இந்தியாவிலுள்ள ஜபல்பூர் ஜில்லாவைச் சேர்ந்த உருப்நாத் என்னும் இடத்திலும், தென்பிஹார் மாகாணத்தைச் சேர்ந்த சகஸ்ரம் என்ற இடத்திலும், ஜெயப்பூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த பைரட் என்னும் இடத்திலும் உள்ள சிலாசாசனங்களில் இன்றைக்கும் காணப்படுகின்றன.

இரண்டாம் கட்டளைச் சட்டத்தில் அவர் பௌத்த மத தருமங்களைச் சுருக்கிக் கூறியுள்ளார். பாப்ரா கட்டளைச் சட்டமும் மேற்கூறிய விஷயங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பினும் அதில் அரசர் பௌத்தர்களின் கோயில்களுக்குச் செய்த

வேலைகளையும், மற்றும் இவைபோன்ற ஏனைய விஷயங்களையும் தெளிவாகக் காணலாம்.

மேற்கூறிய இரண்டு கட்டளைச் சட்டங்களும் சிறு பாறைகளின்மீது செதுக்கப்பட்டு இருத்தலால் அவைகளுக்குச் சிறுபாறைக் கட்டளைச் சட்டங்கள் என்று பெயர்.

அசோகரின் கொள்கைகளையும், அக்கொள்கைகளைப் பரப்ப அவர் அநுஷ்டித்த முறைகளையும் அறிந்து கொள்வதற்கு அவர் கற்பாறைகளின்மீது செதுக்கி இருக்கும் கட்டளைச் சட்டங்கள் உதவுகின்றன. ஆகவே அவைகளைக் குறித்துஞ் சற்று ஆராய்வோம். இங்ஙனம் அவர் கற்பாறைகளின்மீது எழுதிவைத்த கட்டளைச் சட்டங்கள் எண்ணிக்கையில் பதின்னான்காகும். ஆகவே இவைகளுக்குக் கற்பாறைகளின் மீது செதுக்கப்பட்டிருக்கும் பதினான்கு கட்டளைச் சட்டங்கள் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. அக் கற்பாறைகளில் செதுக்கப்பட்டிருக்கும் கட்டளைச் சட்டங்க ளாவன:

முதற் கட்டளைச் சட்டத்தில் அசோகர் உயிர்க் கொலை கூடாது என்பதைக் குறித்துச் செதுக்குவித்துள்ளார். இதனால் அசோகர் அஹிம்சா தருமத்தைப் பின் பற்றியவராவர்.

இரண்டாம் கட்டளைச் சட்டத்தில் அவர் தாம் தம் இராஜ்ஜியத்தைச்சேர்ந்த மாந்தர்களுக்

கும், மிருகங்களுக்கும் புரிந்த நன்மைகளைப்பற்றி மிகத் தெளிவாய்த் தெரிவித் துள்ளார்.

பௌத்த மதத்தைப் பரப்புவதற்கென ஏற்பட்ட பிரசாரகர்கள் ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து ஜனங்களுக்குப் பௌத்தமதக் கொள்கைகளைப் போதித்தல் வேண்டுமென்று அவர்தம் மூன்ரும் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட் டிருக்கின்ருர்.

பௌத்தமதக் கொள்கைகளை ஜனங்களிடையே பரப்பத் தாம் மேற்கொண்ட அநுஷ்டானங்களைக் கூறித் தம்மைப்போலவே தமது பிரஜைகளும், தமது சந்ததியாரும் நடக்கவேண்டுமென்று தம்முடைய நான்காம் கட்டளைச் சட்டத்தில் அசோகர் குறிப்பிட்டுள்ளார்.

அசோகர் தமது ஐந்தாவது கட்டளைச் சட்டத்தில் நற்காரியம் செய்வது கஷ்டமென்றும், துஷ்டகாரியத்தை இலகுவில் செய்துவிடலா மென்றும், ஒவ்வொருவரும் நற் காரியங்களைச் செய்வதிலேயே முனைந்து இருத்தல் வேண்டு மென்றும், அவ்வாறு நற் காரியங்களைச் செய்து கொண்டு வரின் இவ்வுலகத்தில் மாத்திர மல்லாது மேலுலகிலும் நன்மையடையலாம் என்றும் கூறி யிருக்கின்ருர். இன்னும் அவர் இக்கட்டளைச் சட்டத்தில் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கென ஏற்படுத்தப்பட்ட பிரசாரர்களைப் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். இவர்கள் ஜனங்களுக்கு நற் போதனைகளை எடுத்துக் கூறுவதுடன் நின்று

விடாது தவறாகக் குற்றவாளிகள் என்று யாராகிலும் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருப்பின் அவர்களையும் விடுதலை செய்து தங்கள் கடமையை நிறைவேற்றி வந்தனரென்றும் குறிப்பிட்டு அசோகர் மற்றும் இவைபோன்ற பிற விடயங்களையும் அதிற் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆறாம் கட்டளைச் சட்டத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தமக்கு அளிக்கப்பட்ட வேலைகளைச் செவ்வையாய்ச் சரியான காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்று கூறுகின்றார். அதில் மக்களில் தம்முடைய குறைகளை அரசராகிய தம்மிடத்தில் முறை இட்டுக்கொள்ள விரும்புவோர் நேரம், இடம் முதலியவைகளைக் கூடக் கவனியாது தம்மிடம் வந்து தெரிவித்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அசோகர் எல்லோரும் தாம் பௌத்தமத சம்பந்தமாக ஏற்படுத்தியுள்ள சட்டதிட்டங்களை அனுசரித்து நடத்தல்வேண்டுமென்றும், பௌத்தமதத்தை மேற்கொள்ளக் கூடாதவர்கள் ஐம்புலன்களை அடக்கியாள முயற்சிக்கவேண்டுமென்றும், மனோ வாக்குக் காயங்களால் பிறருக்குக் கேடு சூழ எண்ணுதல் கூடாதென்றும், மக்கள் நன்றியறிதலுடன் கூடியவர்களாயிருக்கவேண்டுமென்றும், ஒரே நிலையில் இருக்கக் கூடியவர்களாய் இருக்கவேண்டுமென்றும் தமது ஏழாம் கட்டளைச் சட்டத்தில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

க்ஷேத்திர யாத்திரை செய்வதன் அவசியத்தைக் குறித்தும், ஏழைகளுக்குத் தான தருமங்கள் செய்யும்விடயத்தைக் குறித்தும், இன்னும் இவை போன்ற விஷயங்களைக் குறித்தும் தமது எட்டாம் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடுகின்றார்.

உண்மைக் கிரியைகள் என்ன வென்பதைக் குறித்து அசோகர் தமது ஒன்பதாம் கட்டளைச் சட்டத்தில் மொழிந்துள்ளார்.

பத்தாவது, பதினோராவது கட்டளைச் சட்டங்களில் அசோகர் மேற்கூறிய விஷயங்களையும், அவைகளைப் போன்ற பிற விஷயங்களையும் பல விதமாக மொழிந்திருக்கின்றார்.

அசோகர் தம்முடைய பன்னிரண்டாம் கட்டளைச் சட்டத்தில் எம் மதஸ்தரையும் தூஷிக்கக் கூடாதென்றும், பல மதஸ்தரையும் சகோதரரைப் போலப் பாவிக்க வேண்டுமென்றும் குறித்துள்ளார்.

கலிங்க தேசத்தைக் கைப்பற்றிய பிறகு அரசருக்குப் பௌத்த மதத்தில் அத்தியந்த விசுவாசம் ஏற்பட்டதென்றும், எனவே அரசர் பௌத்த மதத்தை மேற்கொள்ள ஏது வேற்பட்டதென்றும், கலிங்க யுத்தத்தில் ஏற்பட்ட உயிர்க்கொலை அதிகமனோ வியாகூலத்தைத் தமக்கு உண்டுபண்ணியதென்றும் அசோகர் தமது பதின்மூன்றாவது கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பதினான்காம் கட்டளைச் சட்டத்தில் அசோகர் தமது முடிவுரைகளை எடுத்துக் கூறுகின்றார்.

அதில் அசோகர், குமாஸ்தாக்கள் அறிந்தோ அல்லது அறியாமலோ தவறு இழைக்கக்கூடு மென்று குறிப்பிடுகின்றார்.

கலிங்க தேசத்தைக் கைப்பற்றிய பின்னர் அசோகர் அவ்விஷயமாக இரண்டு கட்டளைச் சட்டங்களைப் பிறப்பித்தார். அவைகள் நாம் மேற் கூறிய பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று ஆகிய கட்டளைச் சட்டங்களில் கூறப்பட்ட விஷயங்களையே பெரும்பாலும் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன.

நாம் மேலே எடுத்துக்கூறிய அசோகரின் பதினன்கு கட்டளைச் சட்டங்களையும், அவர் நாடெங்கும் கற்பாறைகளில் செதுக்குவித்தார். அக் கற்பாறைகள் இந்தியாவின் பற்பல பாகங் களில் இன்றைக்கும் இருந்து வருகின்றன.

அசோகர் இவைகளேயல்லாது கற்றூண் களிலும் தமது செயல்களைச் செதுக்கிவைத் திருக் கின்றார். தாம் பௌத்த மதத்தில் கொண்ட அபி லாஷைகளை முதல் இரண்டு கற்றூண் கட்டளைச் சட்டங்களில் குறிப்பிட் டிருக்கின்றார். மூன்றும் கற்றூண் கட்டளைச் சட்டத்தில் அசோகர் தம் மைத்தாமே பரிசீலனை செய்து கொள்வதைக் குறித்துள்ளார். நான்காம் கட்டளைச் சட்டத்தில் அசோகர் ராஜிகாஸ் என்று சொல்லப்பட்ட கமி ஷனர்களின் அதிகாரங்களைக் குறித்தும், அவர் கள் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்தும் மிகத் தெளிவாகவும் விளக்கியிருக்கின்றார்.

ஐந்தாவது கற்றூண் கட்டளைச் சட்டத்தில் அசோகர் ஜீவவதை செய்யாதிருத்தற்குரிய முறைகளைச் சொல்லியிருக்கின்றார். ஆறும் கற்றூண் சட்டத்தில் அசோகர் மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் மதத்தில் பற்றுக்கொண்டவர்களாய் இருத்தல் வேண்டுமென்று குறிப்பிடுகின்றார். ஏழாம் கட்டளைச் சட்டத்தில் அசோகர் தாம் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கென இயற்றிய காரியங்களை எடுத்து மொழிந்துள்ளார்.

அசோகர் நாம் மேலே எடுத்துக் கூறிய கட்டளைச் சட்டங்களை அல்லாது வேறு நான்கு கட்டளைச் சட்டங்களையும் சிறிய கற்றூண்களில் செதுக்குவித்திருக்கின்றார். ஆகவே இவைகளுக்குச் சிறிய கற்றூண் கட்டளைச் சடடங்கள் என்னும் பெயர் வழங்கி வருகின்றது.

சாரநாத், கௌசாம்பி, சான்சி என்ற இடங்களில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைச் சட்டங்கள் பௌத்த மதத்தை மேற்கொள்வோர்களை வேறு பிரிக்கச் செய்யப்படும் சூழ்ச்சிகளைக் கண்டித்து அங்ஙனம் சூழ்ச்சி செய்கிறவர்கட்கு விதிக்கப்படும் தண்டனைகளைக் குறிப்பிடுகின்றன. நான்காம் கட்டளைச்சட்டம் அரசியின் கட்டளைச் சட்டமாகும். இதில் அசோகர் அரசியால் இயற்றப்படும் தானதருமங்கள் அவள் பெயராலேயே வழங்கப்பட வேண்டுமென்று உள்ளங்கை நெல்லிக் கனிபோன்று குறிப்பிட்டு இருக்கின்றார்.

அசோகர் நேபாள தேசத்தைச்சேர்ந்த ரும்மிண்டி என்னுமிடத்தில் கட்டிய தூணில் தாம் பௌத்தமத ஸ்தாபகரான புத்தர் பிறந்த இடமாகிய லும்பினி தோட்டத்திற்கு யாத்திரை செய்ததைக் குறிப்பிட்டுள்ளார். நிக்லிவா என்னுமிடத்திலும் அசோகர் ஒரு கற்றூணை நாட்டியுளார்.

பாராபரா குன்றுகளில் அசோகர் அஜிவிகர்கள் என்னும் ஜாதியாருக்குக் குகைகள் இயற்றுவித்துக் கொடுத்து அவைகளைக் குறிக்கும் விடயங்களைக் கற்பாறைகளில் செதுக்கி வைத்துளார்.

அசோகர் தமது கொள்கைகளைப் பதினாறு கற்றூண்களில் செதுக்கி வைத்துள்ளார் என்று உவாங்சியாங் எடுத்துக் கூறுகின்றார். இப்போது அசோகரால் கட்டப்பட்ட தூண்களில் பத்துத் தூண்கள் நிலவுகின்றன. அவைகளில் அசோகரின் சட்டங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் குறித்தும் சற்று ஆராய்வோம்.

வட இந்தியாவிலுள்ள அம்பலா ஜில்லாவைச்சேர்ந்த தோப்ரா என்னுமிடத்தில், அசோகர் ஒரு தூண் நாட்டியிருந்தார். அதைப் பிரோஜ்ஷா என்னும் சக்கரவர்த்தி டெல்லிக்கு அருகிலுள்ள பிரோஜ்ஷாபாத் என்னும்நகருக்குக் கொண்டுவந்து நிலைநாட்டினார். கோதிலா என்ற குன்றின்மேல் அது நாட்டப்பட்டிருக்கின்றது. அதில் கற்றூண் கட்டளைச் சட்டங்களில் கூறப்பட்டுள்ள ஏழுகட்டளைச் சட்டங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மீரட் என்னுமிடத்திலிருந்து

மேற்கூறிய சக்கரவர்த்தி அசோகரின் கற்றூண் ஒன்றினை டெல்லிக்குக் கொண்டுவந்து நிலை நாட்டினார். இது தற்போது உடைந்துபோய் இருக்கின்றது. இதில் கற்றூண் கட்டளைச் சட்டங்களில் ஆறு சட்டங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தூண் மிகவும் சிதைந்து போய் இருத்தலால் அதில் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் சரியாகக் கட்புலனாகவில்லை. அலகாபாத் கோட்டையில் ஒரு கற்றூண் இருக்கின்றது. அந்தக் கற்றூணையும் மேற்கூறிய சக்கரவர்த்தி கௌசம்பி என்னுமிடத்தி லிருந்து கொண்டுவந்திருக்கலாமென்று யூகிக்கின்றனர். இதில் கற்றூண் கட்டளைச் சட்டங்களில் ஆறும், இராணியின் கட்டளைச் சட்டமும், கௌசாம்பி கட்டளைச் சட்டமும் செதுக்கப்பட் டிருக்கின்றன. இவைகள் யாவும் சீர்கேடு எய்திய நிலையில் இருக்கின்றன. வடபீஹார் மாகாணத்தைச் சேர்ந்த சாம்பரான் ஜில்லாவிலுள்ள லாரியா என்னும் கிராமத்தில் அசோகர் கற்றூண் ஒன்று இருக்கின்றது. அதில் அசோகரின் முதல் ஆறு கட்டளைச் சட்டங்கள் நன்னிலையில் இருந்து வருகின்றன. மேற்கூறிய மாகாணத்தைச்சேர்ந்த மேற்படி ஜில்லாவிலுள்ள லாரியா என்னும் கிராமத்திலேயே மேற்கூறிய தூணுக்குச் சற்றுத் தூரத்தில் அசோகரின் கற்றூண் மற்றொன்று இருக்கின்றது. இதிலும் கற்றூண் கட்டளைச் சட்டங்களில் முதல் ஆறு சட்டங்கள் நன்னிலையில் இருந்து வருகின்றன. மத்திய இந்தியாவிலுள்ள போபால் மாகா

ணத்தைச் சேர்ந்த சான்சி என்னுமிடத்தில் அசோகரின் கற்றூண் ஒன்று இருக்கின்றது. அக் கற்றூண் கீழே விழுந்து உடைபட்டுக் கிடக்கின்றது. அதில்சிறிய கற்றூண் கட்டளைச் சட்டமும், சாரனாத் கற்றூணில் செதுக்கப்பட்டிருந்ததைப் போன்ற கட்டளைச் சட்டமும் அலகாபாத் கற்றூணில் காணப்படுகின்ற கௌசாம்பி கட்டளைச் சட்டமும் அடங்கியிருக்கின்றன. அதில் கூறப்பட்டுள்ள சிறிய கற்றூண் கட்டளைச்சட்டம் நன்னிலையில் இல்லை. சாம்பரான் ஜில்லாவைச் சேர்ந்த ராம்புர்வா என்னும் கிராமத்தில் அசோகரின் கற்றூண் ஒன்று கீழே வீழ்ந்து கிடக்கின்றது. அக் கற்றூணில் கற்றூண் கட்டளைச் சட்டங்களில் ஆறு தென்படுகின்றன. இவைகள் நன்னிலையில் இருக்கின்றன. காசிக்கு அருகிலுள்ள சாரனாத் என்னுமிடத்தில் அசோகரின் கற்றூண் ஒன்று இருக்கின்றது. அஃது உடைந்து கிடக்கின்றது. அதில் சிறிய கற்றூண் கட்டளைச் சட்டம் நன்னிலையில் இருந்து வருகின்றது. நேபாள இராஜ்ஜியத்தைச் சேர்ந்த பிரதேசத்திலுள்ள ரும்மிண்டி, நிக்லிவா என்னுமிடங்களில் அசோகரால் கட்டப்பட்ட இரண்டு கற்றூண்கள் உள்ளன. இவைகளில் அசோகர் பௌத்தமத க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்த விஷயங்கள் முழுதும் விபரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அசோகர் மூன்று வருடகாலத்திற்குள் எண்பத்து நான்காயிரம் ஸ்தூபிகளைக் கட்டி முடித்துள்ளார் என்று கூறுகின்றார்கள்.

பாஹியான் உவாங்சாங் என்னும் சீனதேச யாத்திரிகர்கள் கூறுவதிலிருந்து அசோகர் காலத்தில் அநேக கட்டடங்கள் சிறப்புற்று விளங்கி வந்தன வென்று தெரியவருகின்றது. பாடலிபுரத்தில் கட்டப்பட்டிருந்த அசோகரின் அரண்மனையையும், ஏனைய கட்டடங்களையும் பாஹியான் கண்டு ஆச்சரியமுற்று அவை மனிதர்களால் கட்டப்பட்டிராவென்றும், தேவதைகளாலேயே கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்றும் கூறுகின்றார்.

அசோகர் தமது இராஜ்ஜியத்தில் அநேக கட்டடங்களையும், சந்நியாசி மடங்களையும் கட்டியிருக்கின்றார். அவைகளில் ஒன்றாவது இவ்வமயம் நன்னிலையில் இல்லை. ஆகவே நம்மால் அசோகரால் கட்டப்பட்ட சிறந்த கட்டடங்களைக் குறித்து ஒன்றும் அறிந்து கொள்ள இயலவில்லை. பாஹியானுக்குப்பின் வந்த உவாங்சாங் என்பது ஸ்தூபிகளையும் அநேக சந்நியாசி மடங்களையும் தாம் கண்டதாகவும், அவைகள் யாவும் அசோகரால் கட்டப்பட்டன வென்றும் கூறுகின்றார். அசோகர் பௌத்த மதத்தை மேற்கொண்டவுடன் 'அசோக ராமா' என்னும் ஒரு பெரிய சந்நியாசி மடத்தைக் கட்டினார். அவர் நாலந்தா என்னுமிடத்திலும் பௌத்த சந்நியாசிகளுக்காக அநேக சந்நியாசி மடங்களைக் கட்டியுள்ளார்.

அசோகர் ஸ்தூபிகள் விஷயமாக ஏராளமான பணத்தைச் செலவழித்து இருக்கின்றார். அரண்மனைகளைப் போலவும், சந்நியாசி மடங்

களைப் போலவும் அசோகர் இந்த ஸ்தூபிகளை ஜன நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் கட்டாது தனியான இடங்களிற் கட்டியமையால் அரண்மனைகளுக்கும், சந்நியாசி மடங்களுக்கும் நேர்ந்த கதி இவைகளுக்கு நேரிடவில்லை.

பத்தொன்பதாம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் மத்திய இந்தியாவைச் சேர்ந்த போபால் மாகாணத்தில ஏறக்குறைய பத்து ஸ்தூபிகளும், பாழடைந்த கட்டடங்களும் இருந்தன வென்று ஏற்படுகின்றது.

அசோகர் அநேக ஸ்தூபிகளைக் கட்டினுர் என்று நாம் மேலே கூறியுள்ளோமன்றே? இப்போது ஸ்தூபி என்பது என்ன? அஃது எதற்காகக் கட்டப்பட்டது? என்பதைப்பற்றிச் சற்று ஆராய்வோம். ஸ்தூபி என்பது புத்தர்கள், அல்லது வேறு சிறந்த முனிவர்கள் ஆகிய இவர்களின் அஸ்திகளைச் சேமித்து வைத்தவிடத்தில் அவர்கள் ஞாபகார்த்தமாகக் கட்டப்படும் ஒரு கட்டடமாகும். இன்னும் பௌத்த மதவிஷயத்தில் ஏதாவது ஒரு பெரிய விசேஷம் நடப்பின் அதற்கென கட்டப்படும் ஞாபகார்த்தக் கட்டடமும் ஸ்தூபி என வழங்கப்படுவதாகும்.

உதாரணமாகப் பௌத்தமத ஸ்தாபகராகிய கௌதம புத்தர் நிர்வாண நிலையை யெய்தி இவ்வுலகத்தை நீத்த போது அவரது எலும்புகளை எட்டுக் கூறுக்கி அவர்பால் அன்புள்ள ஒவ்வொரு பகுதியினரும் அவைகளில் ஒவ்வொரு பகுதியை

எடுத்துக் கொண்டு போய்த் தம் இராஜ்ஜியங்களில் அவர் ஞாபகார்த்தமாக ஸ்தூபிகளைக் கட்டினார்கள் என்ற விஷயமும் நோக்கத்தக்கதாகும்.

ஸ்தூபிகள், அது கட்டப்பட்ட காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு கட்டப்பட்டிருக்கின்றன. அசோகர் காலத்தில் கட்டப்பட்ட ஸ்தூபிகள் அர்த்த கோளத்தைப் போல அதாவது கோழிக் கூண்டைப் போலக் கட்டப்பட்டிருந்தன. இந்த ஸ்தூபிகள் கருங்கற்களினாலும், செங்கற்களினாலும் கட்டப்பட்டு இருந்தன.

அசோகரால் கட்டப்பட்ட ஸ்தூபிகளில் நிலைத்திருப்பன மிகச் சிலவே யாகும். அவைகளில் அதிக முக்கியமானது சான்சி என்னும் இடத்திலுள்ள ஸ்தூபியாகும். இந்த ஸ்தூபியின் அர்த்த கோளத்தின் குறுக்களவு நூற்றுப் பத்து அடிகளாகும். இந்த ஸ்தூபியின் உயரம் இது நன்னிலையில் இருந்தபோது எழுபத்தேழரை அடிகளாகும். இந்த ஸ்தூபியின் தூண்கள் ஒவ்வொன்றும் பதினேரு அடி உயரமுள்ளவை. இந்த ஸ்தூபிக்குள் செல்ல நான்கு வாயில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வாயிலும் முப்பத்துநான்கு அடி உயரங் கொண்டுள்ளது. இவைகட்குத் தென்புறம் உள்ள வாயிலில் அசோகரால் கட்டப்பட்ட தூண் ஒன்று சீர்கேடுற்ற நிலையில்உடைந்து வீழ்ந்து கிடக்கின்றது. இத்தூண் நன்னிலையில் இருந்த போது இதன் உயரம் நாற்பத்திரண்டு அடிகள் எனத் தெரிகின்

றது. நாம் மேற்கூறிய ஸ்தூபிக்குச் சற்றுத் தூரத்தில் அநேகம் ஸ்தூபிகள் சீர்கேடு அடைந்தும் இருக்கின்றன.

பாகல்கண்ட் மாகாணத்தைச் சேர்ந்த நாகோட் பிரதேசத்திலுள்ள பார்ஹட் என்னும் கிராமத்திலும், கருங்கற்களினால் கட்டப் பட்ட ஸ்தூபி ஒன்று இருந்ததைச் சர் அலெக் சாண்டர் கன்னிங்ஹாம் என்பவர். 1873-ம் வருஷத்தில் கண்டு பிடித்தார். அந்த ஸ்தூபி இப்போது சீர்கேடு அடைந்த நிலையில் இருக்கின்றது. அதன் சில பாகங்களை இந்திய அரசாங்கத்தார் கல்கத்தா பொருட் சாலையில் கொண்டு வந்து வைத்திருக்கின்றனர். இந்த ஸ்தூபிகளின் கிராதிச் சட்டங்களிலும், வாயிற் கதவுகளிலும் பௌத்த மத சம்பந்தமான கதைகளும், பௌத்தமத ஸ்தாபகரான கௌதமபுத்தரின் பற்பல பிறவிகளைக் குறித்த அதி இரகஸியமான கதைகளும் மிக அழகாகத் தீட்டப் பட்டிருக்கின்றன.

அசோகர் காலத்தில் பிரதிமைகள் செய்து ஆங்காங்கு வைக்கப்பட் டிருந்தன என்பதற்கு அநேக ஆதாரங்கள் பாடலி புரத்திலும், டிடராகன்ஞ் என்னுமிடத்திலும் இருக்கின்றன. ஆக்ராவுக்கும், வட மதுரைக்கும் இடையில் பார்க்ஹாம் என்ற ஒரு கிராமம் இருக்கின்றது. அக்கிராமத்தில் ஏழு அடி உயரம் கொண்ட ஆண்பிரதிமை ஒன்று நிற்கின்ற மாதிரியில் கட்டப்பட்டுள்ளது. அந்தப் பிரதிமையின் முகம் சிதைந்

துள்ளது. அதன் கைகள் உடைந்திருக்கின்றன. பெஸ்நாகர் என்னுமிடத்திலும் ஒரு ஸ்திரீயின் பிரதிமை உள்ளது. அதுவும் ஏறக்குறைய ஏழடி உயரம் உள்ளதாகும். அதன்முகமும் சிதைந்துள்ளது. அதன் உருவும் சிதைந்துள்ளது. அதற்கும் இவ்வமயம் கைகள் காணப்படவில்லை. வடபீஹார் மாகாணத்தைச் சேர்ந்த முசபர்பூர் ஜில்லாவில் பாசார் என்னுமிடத்திற்குச் சமீபத்திலிருக்கும் பாக்ஹீரா என்னுமிடத்திலும் அசோகரால் கட்டப்பட்ட தூண் ஒன்று இருக்கின்றது. அத்தூணில் யாதும் செதுக்கப்படவில்லை. அத்தூணின் உயரம் ஏறக்குறைய நாற்பத்து நான்கு அடிகளாகும். ராம்பூரா என்னுமிடத்திலும் அசோகரால் கட்டப்பட்ட தூண் ஒன்று காணப்படுகின்றது. அதிலும் அசோகர் விஷயம் ஒன்றும் செதுக்கப்படவில்லை.

அசோகரால் கட்டப்பட்ட தூண்கள் இன்னும் பல பூமிக்குள் புதைந்து கிடக்கின்றன.

அசோகர் தம்மால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளைக் கற்றூண்களிலும் பாறைகளிலும் செதுக்கி வைத்தார் என்று கூறினேமன்றே? பாறைகளில் செதுக்கி வைக்கப்பட்டவை இராஜ்ஜியத்தின் வடமேற்குக் கோடியிலிருந்து பெண்ணையாற்றங்கரை வரையில் வியாபித்துள்ளன. அவைகளைக் குறித்துஞ் சற்று ஆராய்வோம்.

வடமேற்கு எல்லைப்புற மகாணத்தைச் சேர்ந்த பிஷாவர் ஜில்லாவிலிருக்கும் ஒரு கிராமத்தில்

அசோகரின் பதினொன்று கட்டளைச் சட்டங்களும், இருபத்துநான்கு அடி நீளமும் பத்து அடி அகலமும் உள்ள கற்பாறை யொன்றின் மீது செதுக்கப்பட்டிருக்கின்றன. இக் கற்பாறையில் அசோகரின் பன்னிரண்டாம் கட்டளைச் சட்டம் காணப்படவில்லை. மேற்கூறிய இடத்திற்குச் சமீபத்திலிருக்கும் மற்றொரு கற்பாறையின் மீது அசோகரின் பன்னிரண்டாம் கட்டளைச்சட்டம் செதுக்கப்பட்டுள்ளது. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்த மான்சாரா என்ற இடத்திலுள்ள ஒரு கற்பாறையிலும் பௌத்தரின உபதேசங்கள் செதுக்கப்பட்டு இருக்கின்றன. இவைகள் நன்னிலையில் உள்ளன. ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்த டேராடூன் ஜில்லாவிற்கும் கால்சி என்னும் கிராமத்தில் ஒரு கற்பாறையின் மீதும் அசோகரின் உபதேசங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. தாணு ஜில்லாவிலிருக்கும் சோப்பாராவிலும், கத்தியவார் பிரதேசத்தைச் சேர்ந்த கிர்ணார் என்னுமிடத்திலுள்ள கற்பாறைகளிலும் பல கட்டளைச் சட்டங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. கலிங்க நாட்டை அசோகர் வென்ற பிறகு அதைக் குறித்து இரண்டு கட்டளைச் சட்டங்கள் பிறப்பித்தனர் அன்றோ? அவை ஒரிஸ்ஸா மாகாணத்தைச்சேர்ந்த பூரி ஜில்லாவில் தவலி என்னுமிடத்தில் இருக்கும் கற்பாறையிலும், கஞ்சம் ஜில்லாவைச்சேர்ந்த ஜாகாடா என்னும் இடத்திலிருக்கும் கற்பாறையிலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. சிறிய கற்பாறைக் கட்டளைச்சட்டங்கள் மைசூரிலுள்ள

சித்தால்டிரக் ஜில்லாவைச் சேர்ந்த சித்தபுரம், ஜதிங்க இராமேஸ்வரம், பிரம்மகிரி ஆகிய இம் மூன்று விடங்களிலுமுள்ள கற்பாறைகளில் செதுக் கப்பட்டுள்ளன. தென் பீஹார் மாகாணத்தைச் சேர்ந்த ஓர் இடத்திலும், ஜபல்பூர் ஜில்லாவைச் சேர்ந்த ருப்நாத் என்னுமிடத்திலும், நைசாம் மாகாணத்திலிருக்கும் மாஸ்கி என்னுமிடத்திலும், இராஜபுதனத்தைச் சேர்ந்த பைரட் என்னுமிடத் திலு முள்ள கற்பாறைகளில் அசோகரின் கட் டளைச் சட்டங்கள் செதுக்கப்பட்டு இருப்பதை இன்றும் நாம் பிரத்தியட்சமாகக் காணலாம்.

அசோகர் பௌத்த மதக் கிரந்தங்களில் கூறப்பட்டுள்ள சில முக்கிய விடயங்களை ஒன்றாகத் திரட்டி பைரட் என்னு மிடத்திற்குச் சமீபத்தி லிருக்கும் பாப்ரு என்னுமிடத்தில் ஒரு பெரிய கற்பாறையில் செதுக்குவித்துள்ளார்.

நாம் மேற்கூறிய தூண்களின் தலைப்பில் பிரதிமைகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. உதா ரணமாக ஒரு தூணின் மேற்பாகத்தில் கருடனின் சிலை யொன்று செதுக்கப்பட் டிருக்கின்றது. மற் றொரு தூணின் தலைப்பில் சிங்கத்தின் சிலை யொன்று செதுக்கப்பட்டுளது. மற்றொரு தூணில் சிங்கத்தின் சிலை யொன்று உச்சியில் வைக்கப்பட் டிருந்தது. அஃது கீழே விழுந்து பூமியில் புதை பட்டிருந்தது. அதை ஊரார் தோண்டி எடுத்து இருக்கின்றனர். மற்றுமொரு தூணின் உச்சியில் நான்கு சிங்கங்களின் சிலைகளிருந்தன. அத் தூண்

கீழே விழுந்து கிடக்கின்றது. இன்னுமொரு தூணில் நான்கு சிங்கங்களின் மேல் பௌத்த ஆக்ஞா சக்கரமொன்று அமைக்கப்பட்டிருந்தது. மற்றும் ஒரு தூணின் உச்சியில் மணியொன்று அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

அசோகரால் கட்டப்பட்ட கற்றூண்களனைத்தும் கற்களினால் கட்டப்பட்டுள்ளன. இரண்டாயிரத் தைந்நூறு வருடங்களுக்குப் பின்னரும் அத்தூண்கள் இருக்கும் நிலையையும் அவைகளின் நேர்த்தியையும், வேலைப்பாட்டின் திறமையையும், அவைகளின் மீது பொறிக்கப்பட்டிருக்கும் விஷயத்தையும் உற்று நோக்குவோருக்குக் கட்டாயம் வியப்பு ஏற்படும் என்பதில் சற்றேனும் ஐயங் கிடையாது. நமது இந்திய நாட்டைச் சேர்ந்த சகோதரர்கள், உலகத்தின் பல பாகங்களில் வசித்து வருவோர் காட்டு மிராண்டிகளாய் நாகரிகம் என்பதின்றி வன விலங்குகளைப் போன்று சஞ்சரித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, பல கலைகளிலும் கீர்த்தியடைந்திருந்தனர் என்பதை நோக்குவோர் சற்றும் தாமதியாமல் ஆச்சரியங் கொள்வரன்றோ? ஆம் என்றே பதில் பகரல் வேண்டும். அத்தகைய நம் நாடு இவ்வமயம் இருக்கும் நிலையைக் கண்டு ஒவ்வொருவரின் உள்ளமும் வருந்தவேண்டும். நமது தாய் நாடு முன்னிருந்த உயர்பதவியை யடைய நாம் அனைவரும் ஒருங்கே முயன்றுழைத்தல் வேண்டும். இஃதன்றோ நம் தாய் நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமையாகும்? இன்றேல் நாம்

நம் தாய்நாட்டைப் பழித்தவர்களாகி மீளாதகேவல வாழ்வில் அழுந்திக் கிடப்போம் என்பதற்குக் கிஞ்சித்தேனும் சந்தேகம் இல்லை.

அசோகர் காலத்தி லிருந்த மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும், மடங்களையும், தவசிகளுக்கென ஏற்படுத்தப்பட்ட மலைக்குகைகளையும், தூண்களையும், ஸ்தூபிகளையும், மற்று மிவைபோன்றவைகளையும் கவனிக்கும் போது நம் இந்தியநாடு அக்காலத்தில் எத்தகைய செல்வத்தில் மிளிர்ந்து கிடந்தது என்பதை இலகுவாக அறிந்து கொள்ளலாம். இன்னும் அசோகரின் சேனையின் தொகையை நன்கு கவனித்தால் நமது இந்திய நாட்டின் செல்வச் சிறப்பு விளங்காநிற்கும்.

இப்போது நம்நாட்டில் ஏதாவதொரு திருப்பணியை நிறைவேற்ற வேண்டுமாயின் அதற்குப் பலபெயர்களின்உதவியை நாடுகின்றனர் அன்றோ? உதாரணமாக ஒரு கோயிலைச் சேர்ந்த மண்டபத்தையோ, அல்லது திருக்குளத்தையோ சீர்திருத்த வேண்டுமாயின் அதற்கெனப் பலபேரிடமிருந்து பண வசூல் செய்து அத்திருப்பணியை நிறைவேற்றி முடிக்கின்றனர் என்பது கண் கூடாகக் கண்டு வரும் விடயமாகும். இதைப் போலவே அசோகர்காலத்திலும் ஜனங்கள் மதசம்பந்தமான விஷயங்களுக்குத் தங்களால் இயன்ற பொருளுதவிகளைச் செய்து வந்தனர். அப்பொருள்களை அரசர் ஏற்றுத் தருமகர்த்தன் என்ற முறையில் காரியங்களைச்செய்து வந்தார். ஆகையினாற்றான் அசோகர்

மேற்கூறிய செயல்கள் யாவற்றையும் செவ்வனே செய்து முடிக்கக் கூடியவரானார்.

அசோகர் தமது கட்டளைச் சட்டங்களையும், பிறவற்றையும் கற்பாறைகளிலும், கற்றூண்களிலும் செதுக்கி வைத்ததின் காரணம் யாதெனில் அவை நீண்ட நாட்கள் வரை அழியாதிருக்க வேண்டும் என்ற சீரிய கருத்தைக் கொண்டே யாகும் எனக் கூறலாம்.

அசோகர் கல்வி நன்னிலையில் இருந்த தென்றே தெரியவருகின்றது. இப்போதும் பர்மாவில் சந்நியாசி மடங்கள் யாவும் கல்வி அபிவிருத்தி விடயமாகச் செய்து வரும் காரியங்கள் பாராட்டத்தக்கனவாகும். அசோகரின் தரும உபதேசங்கள் தேசத்தின் நாலுபக்கங்களிலும் செதுக்கப்பட் டிருக்கின்றதிலிருந்து அக்காலத்தில் ஜனங்களிற் பெரும்பாலார் எழுத்து வாசனை அறிந்தவர்களாகவே இருந்திருத்தல் வேண்டுமென்றும் தெரிகிறது.

அசோகரின் கட்டளைச் சட்டங்களனைத்தும் அக்காலத்தில் இந்தியாவில் வழங்கப்பட்டு வந்த பிராகிருதம் என்னும் பாஷையில் எழுதப்பட்டுள்ளன. இப்பாஷை சமஸ்கிருத பாஷையின் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. சில விடங்களில் அசோகர் தமது கட்டளைச் சட்டங்களை அது செதுக்கப்பட்ட பிரதேசத்தில் வழங்கி வந்த பாஷைகளிலேயே செதுக்கு வித்துள்ளார்.

ஐந்தாம் அத்தியாயம்

பௌத்தமதமும், இலங்கையும்.

முன்னமே நாம் அசோகர் பௌத்த மதத்தை இலங்கைத் தீவிலும் பரப்புவித்தார் என்று உரைத்திருப்பதை மறந்திருக்கமாட்டீர்கள். ஆகவே அதைக் குறித்துஞ் சற்று ஆராய்வோம்.

மேற் கூறப்பட்ட அத்தியாயங்களி லொன்றில் அசோகர் உஜ்ஜயினி மாகாணத்தின் இராஜப் பிரதிநிதியாய் இருந்து வருகையில் அவர் சைத்தியகிரி என்னும் மங்கை யொருத்தியை மணம் செய்து கொண்டார் என்றும், அம் மங்கையினிடம் அசோகருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன வென்றும், அவைகளி லொன்றின் பெயர் மகேந்திரன் என்றும், மற்றொன்றின் பெயர் சங்கமித்திரை என்றும் கூறினோமன்றோ?

இம் மகேந்திரனைச் சிலர் அசோகரின் பிள்ளையென்றும், மற்றுஞ் சிலர் அசோகரின் உடன் பிறந்தானென்றும் கூறுகின்றனர். எஃது எவ்வித மிருப்பினும் மகேந்திரன் என்னும் பெயர் பூண்ட ஒருவன் இருந்தான் என்பதும், அவனால் பௌத்த மதம் இலங்கையில் பரவியதென்பதும் யாராலும் மறுக்கமுடியாத சரித்திர சம்பந்தமான விடயங்களாகும்.

அசோகரின் இராஜ்ஜியம் பெண்ணை யாற்றங்கரைவரை வியாபித்திருந்த தன்றோ? தமிழ் நாட்டைச் சேர்ந்தோர் பௌத்த மதத்தை மேற்

கொண்டொழுகாவிடினும், அவர்கள் அசோகர் ஜீவராசிகளின் நன்மைக்கென இயற்றிய காரியங்களைப் போற்றியே வந்தனர். அசோகர் காலத்திற்குப் பின்னர் இந்தியாவின் பற்பல பாகங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்த சீனயாத்திரிகர்கள் தென் இந்தியாவிலும் அநேக சந்நியாசி மடங்கள் இருந்ததாகக் கூறி இருக்கின்றனர். அப்போது தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போக்குவரத்து ஏற்பட்டிருந்ததாகவும் சரித்திர சம்பந்தமாகத் தெரிய வருகின்றது.

ஆகவே மகேந்திரன் தன்னுடன் அநேக பௌத்தபிக்ஷுக்களை அழைத்துக் கொண்டு, பௌத்த மதக்கிரந்தங்களையும் எடுத்துக் கொண்டு, தென் இந்தியாவின் துறைமுகம் ஒன்றிலிருந்து இலங்கைக்குப் பிரயாணமானான். இங்ஙனம் பிரயாணமான மகேந்திரன் இலங்கைக்குச் சென்று ஆங்கே ஆண்டுகொண்டிருந்த அரசனுடன் சம்பாஷித்து அவனைப் பௌத்தனாக்கினான். பிறகு இலங்கை மக்களும் பௌத்தமதத்தைமேற்கொண்டொழுக ஆரம்பித்தார்கள். அப்போது இலங்கையில் ஆண்டு கொண்டிருந்த அரசன் பெயர் தேவனும்பிய திஸ்ஸா என்பதாகும். இவ்வரசன் அசோகரை நேருக்கு நேராகக் காணாவிடினும் அவரிடத்தே அத்தியந்த விசுவாசமும், மதிப்பும், அன்பும் கொண்டிருந்தான். ஆகவே அவன் மகேந்திரனின் போதனைக் கிணங்கிப் பௌத்த மதத்தை மேற்கொண்டான் என்றும் சிலர் கூறுகின்றனர்.

அசோகரின் குமாரத்தியாராகிய சங்கமித்திரை என்பாள் அநேகம் பிக்ஷுக்களை யழைத்துக் கொண்டு மகேந்திரனுடன் இலங்கைக்குச் சென்றனள். இவள் புத்தகயையினின்றும் போதிவிருட்சத்தின் கிளையொன்றைத் தன்னுடன் கொண்டு சென்று இலங்கையில் அதைப் பயிராக்கினள் என்று ஊர்க்கதை யொன்று வழங்குகின்றது. இக்கதை மெய்மையோ அன்றிப் பொய்மையோ வென்பதை யாம் அறிகிலேம். ஆனல் புத்தகயையினின்றும் போதிவிருட்சத்தின் கிளையொன்று கொண்டு போகப் பட்டதும், அஃது இலங்கை அரசனாகிய திஸ்ஸா என்பவனல் அவ்விடத்திற் பயிராக்கப்பட்டது என்பதும், அஃது இன்றைக்கும் இலங்கையில் இருந்து வருகின்றதென்பதும் உண்மையாகும். அந்த மரத்தின் வேரினின்று உற்பத்தியான வேறுமரத்தை இன்றைக்கும் நாம் இலங்கையிலிருக்கும் அநுராதபுரத்திற் காணலாம். இவ்வநுராதபுரம் என்னும் பட்டணம் இலங்கையின் பழைய தலைநகராய்இருந்துவந்தது. பௌத்த மத ஸ்தாபகரான கௌதம புத்தருக்கு நிழலைக் கொடுத்ததுடன் ஞானத்தையும் கொடுத்த ஒரு மரத்தின் கிளையை ஜனங்கள் இன்றைக்கும் கொண்டாடி வருகின்றார்கள்.

இலங்கை மன்னன் மனைவியாகிய அநலை என்பவள் பௌத்த மதத்தை மேற்கொள்ள விரும்பவே பிக்ஷுணியாகிய சங்கமித்திரை இராணியையும், அவள்தோழிப் பெண்களையும் மற்று மனேக

மாதர்களையும் பௌத்தர்களாக்கினள். அரசன்சங்க மித்திரை தங்கி இருப்பதற்கென ஒரு மடத்தைக் கட்டிக் கொடுத்தனன் என்று தெரிய வருகின்றது.

பௌத்த மதத்தை மேற்கொண்ட இலங்கை யரசன் அசோகரைப் போலவே பௌத்த மதக் கொள்கைகளைத் தன் நாடெங்கும் பரப்பத் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டான். அவன் அநுராத புரத்தை நன்னிலைக்குக் கொண்டுவந்து அழகு படுத்தினான். 'துபராமதகபா' என்ற கட்டடம் ஒன்றையும் அரசன் கட்டுவித்தான். சிலர் இக்கட்டடத்தின் அடியில் புத்தரின் ஞாபகார்த்த சின்னங்கள் இருக்கின்றன வென்றும், அச் சின்னங்களை அசோகர் கொடுத்தனுப்பின ரென்றும் உரைக்கின்றனர். இலங்கை யரசன் இந்தியாவினின்று இலங்கைக்குப் போந்த பௌத்த பிக்ஷுக்கள் தங்குவதற்கென ஒரு மடத்தைக் கட்டிக் கொடுத்தான். மகேந்திரனுக்கெனக் குன்று ஒன்றைக் குடைந்து குகை ஏற்படுத்திக் கொடுத்தான். அக் குகையை இன்றைக்கும் இலங்கையிற் காணலாம்.

இலங்கையிற் பௌத்த மதம் பரவியதாலுண்டான பெருமை மகேந்திரனையே சாரும். இவன் பௌத்த மதத்தை இலங்கைத் தீவில் பரப்புவதற்கு முன் அத்தீவிலிருந்த ஜனங்கள் நற்போதனைகளை மிகவும் தன்னகத்தே கொண்டிராத ஒரு மதத்தை அநுசரித்து வந்தார்கள் என்றும், மகேந்திரனுக்குப் பிறகு அந்த ஜனங்கள் தாங்கள் மேற்கொண்

டிருந்த மதத்தை விட்டுப் பௌத்த மதத்தை மேற்கொண்டார்களென்றும் தெரிகின்றது.

அசோகரின் சகோதரர்களைப் பற்றியேனும், அன்றி அவர் குமாரர்களைப் பற்றியேனும் நமக்குச் சரியான விவரம் யாதும் கிடைக்கவில்லை.

அசோகரின் தந்தையாராகிய பிந்துசார மகாராஜர் பதினாறு பெண்மணிகளை மணம் புரிந்து கொண்டார் என்றும், அவர்களிடத்தே அவருக்கு நூற்றொரு குமாரர்கள் உதித்தனரென்றும் நாம் முன்னொரு அத்தியாயத்தில் கூறியுள்ளோமல்லவா? அவர்களில் ஒருவனாகிய வீதாசோகன் என்பான் சந்நியாசியாகி அரண்மனையைச் சேர்ந்த இடங்களிலேயே பிச்சையேற்றுண்டு ஜீவித்திருந்தான் எனத் தெரிகின்றது.

அசோகரின் கடைசி சகோதரரான திஸ்யா என்பார் சிலகாலம் அரசனுக்குப் பிரதிநிதியாய் இருந்து பின்னர் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புற்றுச் சந்நியாசியானார் என்றும் தெரிகின்றது.

அசோகரின் குமாரர்களைப் பற்றிப் பற்பலவிதமான கதைகள் வழங்குகின்றன. அக்கதைகளின்படி அசோகருக்கு மகேந்திரன், குணாலன், ஜாலங்கா என்னும் மூன்று குமாரர்கள் இருந்ததாகத் தெரிகின்றது. மற்றும் அசோகருக்குச் சங்கமித்திரை என்னும் குமாரத்தி ஒருத்தியும் இருந்ததாக முன் நாம் அறிந்தோம்.

அசோகர் பலமனைவியர்களை மணந்திருந்தார் எனத் தெரிகின்றது. அவர்களில் ஒரு மனைவியின்

பெயர் ஆசாண்டி மித்திரை என்பதாகும். இவளுக்குப் பிறந்தவன்தான் குணாலன் என்பவன். அசோகரின் மற்றொரு மனைவியின் பெயர் திஷ்யரக்ஷிதை என்பதாகும். இவள் அழகிலும் வனப்பிலும் மிக மேன்மையுடையவளாய் இருந்தாள். எனவே அசோகருக்கு இவளிடத்தில் அளவு கடந்த பிரியம் ஏற்பட்டிருந்தது. இவள் தனது அழகுக்கேற்ப நற்குணமுள்ளவளாய் இல்லை. இவள்தனது மூத்தாள்மகனாகிய குணாலன் மீது பிரியம் கொண்டாளென்றும், அவன் அவள் பிரியத்திற்கு இணங்காது போகவே அவள் அவனை அரசனைக்கொண்டு தக்ஷசீலத்திற்கு அனுப்பினாளென்றும், பின்னர் ஒருநாள் அவள் தக்ஷசீலத்திலிருந்தமந்திரிகளுக்கு அசோகர் எழுதியதைப் போன்று கடிதம் ஒன்று எழுதி அதில்அசோகரின் அடையாளத்தை(Seal) அவர் தூங்கும்போது பொறித்துவைத்து அதைத் தக்ஷசீலத்திற்கு அனுப்பினாள் என்றும், குணாலன் அக்கடிதத்தைக் கண்டு அஃது தனது தந்தையார் எழுதிய கடிதமாகுமென்று தீர்மானித்துத் தன் மந்திரிகளை அழைத்து அதில் கூறியுள்ளபடியே தன் கண்களைக் குருடாக்கித் தன்னையும்தன்மனைவியையும் காட்டுக்கு ஓட்டி விடும்படி கூறினாரென்றும், பின்னர் அக்குணாலன் பாடலிபுரத்தைச் சேர்ந்து அரசரிடம் தன் விருத்தாந்தங்களை எடுத்துரைக்க நேரிட்டதென்றும், அப்போது அரசர் தம் குமாரனின் பரிதாப நிலைக்கிரங்கித் தக்கவர்களைக் கொண்டு அவனுக்குக் கண் பார்வை மீண்டும் வரும்படி செய்தனரென்றும், அரசர் தம் குமா

ரனைக் கெடுத்த இராணியைக் கொலை செய்து விட்டாரென்றும் ஊர்க் கதைகள் வழங்கிவருகின்றன.

அசோகரின் சாசனங்களில் குறிப்பிட்டுள்ளவாறு கருவாகி என்னும் பெயரினைக்கொண்டவள் அவரது பட்டத்து இரண்டாவது மகிஷியாய் இருந்தாளென்றும், அவளிடம் அவருக்குத் திவாரா எனும் குமாரன் பிறந்தான் என்றும் தெரிகிறது.

அசோகர் தமது சாசனங்களில் தமக்கு அநேக குமாரர்களும், பேரப்பிள்ளைகளும் பிறந்திருந்ததாகக் கூறியிருக்கின்றார். அதைத்தவிர சரித்திர சம்பந்தமாக வேறொன்றும் தெரியவில்லை.

அசோகருக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர்களைக் குறித்துப் புராணங்கள் பற்பல விதமாய்க் கூறுகின்றன. அசோகரின் கல்வெட்டுக்களின் படி அவர் இரண்டாவது பட்ட மகிஷியான கருவாகி யென்பாளின் பிள்ளை திவாரா என்பவனுவன். அவன் கதி யாதாயிற்று என்பதைப் பற்றி யொன்றும் தெரியவில்லை. கயைக்குச் சமீபத்திலிருக்கும் நாகார்ஜுனி குன்றுகளில் அசோகரின் பேரப்பிள்ளையாகிய தசரதர் என்பவரே அஜிவிகர்களுக்கெனக் குடைந்து கொடுத்திருக்கும் குகைகளின் கல் வெட்டுக்களினல் அசோகருக்குப் பின்வந்த அரசர்களில் சரித்திர சம்பந்தமானவராவர்.

சந்திரகுப்தரால் ஸ்தாபிக்கப்பட்டுப் பிம்பிசார மகாராஜராலும், அசோக சக்கரவர்த்தியாலும் ஆளப்பட்ட மகத இராஜ்ஜியம் அவர்களுக்குப் பின் வந்தவர்களால் சீர்குறைய ஆரம்பித்தது.

கடைசியில் சுங்க வமிசத்தினர் புறப்பட்டு மகத இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொண்டு ஆள ஆரம்பித்தனர் எனத் தெரிகிறது.

அசோகர் மத விஷயத்தில் மாத்திர மல்லாமல் இராஜாங்க நிருவாக விஷயத்திலும் தலை சிறந்து விளங்கினர். மதவிஷயத்தில் அசோகரைக் கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்த கான்ஸ்டன்டைன் அரசனுக்கும், மூகம்மதிய மதத்தைப் பரவச் செய்த ஒமார்கலீபாவுக்கும் ஒப்பிடலாம். இந்தியாவில் அரசாண்ட மூகலாய அரசர்களான அக்பருக்கும்' ஔரங்கசீப்புக்கும் அசோகர் சற்றும் குறைந்தவரல்லர். ஜீவகருணையில் இவரே சிறந்தவர் என்பது பொருந்தும். அசோகரின் பெரும் பெயர் என்றும் இவ்வுலகில் நிலவி நிற்பதாக!

முற்றிற்று.

The Excelsior Power Press, Madura.

~~Z 29~~

2 31
68

Cuddy

1-11-20